விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 345 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 13 செவ்வாய்க்கிழமை (29.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சர்வதேசத்துடன் இணக்கமாக செயற்பட

## நடுநிலையான வெளிவிவகார கொள்கையை பின்பற்ற வேண்டும்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)
யுத்த காரணிகளினால் இலங்கையின் சர்வதேச உறவில் பாதிப்பு ஏற்படவில்லை. 2015ஆம் ஆண்டுக்கு முற்பட்ட அரசாங்கத்தின் ஒரு சில செயற்பாடுகள் சர்வதேச உறவை இல்லாதொழித்தது. நடுநிலையான

15

மாவீரர் நாள் நினைவுகூரலுக்கு

## தடைகளை ஏற்படுத்தாதது நல்லிணக்க சமிக்ஞை

சபையில் செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)
மாவீரர் நாள் நினைவுகூரலுக்கு பெருமளவில் எவ்வித தடைகளும் ஏற்படுத்தவில்லை என்றும் அதனை வரவேற்பதாகவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
நேற்று உரையாற்றிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்

15

## ஹெரோயினுடன் மானிப்பாயில் மூவர் கைது

(மானிப்பாய்)
மானிப்பாய் பகுதியில் உயிர்க்கொல்லி ஹெரோயினுடன் மூவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களில் இருவர் தலா 30 மில்லிக்கிராம் ஹெரோயினையும் மற்றையவர் 40 மில்லிக்கிராம் ஹெரோயினையும் உடைமையில் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.
22, 23 மற்றும் 25 வயதுகளுடைய மூவரும் ஏழாலை,

15

சர்வதேசத்துடன் மோதிக்கொண்டு

# நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது



சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)
நாடு பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுடன் மோதிக்கொண்டு நாட்டை கட்டியெழுப்ப முடியாது. அரசாங்கம் இதனைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

15

## மானிப்பாயில் இளைஞன் மீது இராணுவம் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - மானிப்பாய் பகுதியில் இளைஞர் ஒருவர் இராணுவம், விசேட அதிரடிப் படை, பொலிஸாரால் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டுள்ளார்.
மானிப்பாய் ஆலடிச் சந்திக்கு அண்மையில் நேற்றிரவு 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.
28 வயதுடைய பாலமுரளி நிரோசன் என்பவர் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்

15

## 24 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

### 5 படகுகளும் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)
நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள்நுழைந்த 24 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.
தமிழகத்தில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட மீனவர்களின் ரோலர் படகுகளை இவ்வாறு கடற்படையினர் பிடித்துள்ளனர்.
இவ்வாறு பிடிக்கப்பட்ட படகுகள் இன்று காலை மயிலிட்டித்

15

## சிங்கள மக்களுக்கு தமிழர் தொடர்பில் புரிதல் ஏற்பட்டுள்ளது



பாராளுமன்றில் நன்றி தெரிவித்தார் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)
சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்கள் தொடர்பில் சற்று புரிதல் ஏற்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.
2023ஆம் ஆண்டுக்கான பாதீட்டின்

15

## பால்மா விலை சடுதியாக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)
உள்ளூர் பால்மாவின் விலையை மேலும் அதிகரிக்க பால்மா நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

15

## கனடா அனுப்புவதாகக் கூறி சுமார் 42 இலட்சம் மோசடி

பெண் ஒருவருக்கு எதிராக முறைப்பாடு
இரு வாரங்களில் மூன்றாவது சம்பவம்

(யாழ்ப்பாணம்)
பண்டத்தரிப்பு - வடலியடைப்பு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கனடாவிற்கு அனுப்புவதாக கூறி 42 இலட்சத்து 50 ஆயிரம் பெற்றுவிட்டு ஏமாற்றுவதாக மானிப்பாய் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
பணத்தினை பெற்றுவிட்டு பல மாதங்கள் ஆகியும் குறித்த பெண், முறைப்பாடு பதிவு செய்தவரை கனடாவிற்கு அனுப்

15

## கொழும்பிலிருந்து யாழுக்கான நேரடி ரயில் சேவைகள்

### 5 மாதங்களுக்கு நிறுத்தப்படவுள்ளது


(யாழ்ப்பாணம்)
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான நேரடி ரயில் சேவை 5 மாதங்களுக்கு இடைநிறுத்தப்படவுள்ளது
போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன இதனை பாராளுமன்றில் வைத்துத் தெரிவித்தார்.
மஹவயில் இருந்து யாழ்ப்பாணம் வரையான ரயில்பாதை பயன்படுத்த முடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளது.
இதனால் ஜனவரி மாதம் 15ஆம் திகதி முதல், 5 மாதங்களுக்கு

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## திரு. இராமநாதர் மயில்வாகனம்

( ஓய்வுநிலை உத்தியோகஸ்தர் - காவல்துறை உளவுப் பிரிவு )

கோவிற்கடவை துன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. இராமநாதர் மயில்வாகனம் அவர்கள் கடந்த 26.11.2022 (சனிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர் - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் விஜயகுமாரி, காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் ரவிக்குமார், இந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற முத்துக்குமாருவின் தம்பியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராஜசிங்கம், செல்வவிநாயகம், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சிவயோகம், அமிர்தலிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு அண்ணனும் காலஞ்சென்ற விஞ்ஞானமூர்த்தி மற்றும் தாட்சாயினி ஆகியோரின் மாமனாரும் வினோத்தா, விதுசன் ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30.11.2022) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-5357)

074 183 7405

தகவல் :-
குடும்பத்தினர்

# காரைநகர் ஈழத்து சிதம்பர பாலஸ்தாபனத்திற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் பாலஸ்தாபனத்திற்கு ஊர்காவற்துறை மாவட்ட நீதிமன்று நேற்று இடைக்கால கட்டளை வழுங்கியுள்ளது.

திருவெம்பாவை உற்சவ காலத்தில் ஆலய தர்மகர்த்தாக்களில் ஒருவர் டிசம்பர் நாலாம் திகதி பாலஸ்தாபனத்தை செய்யப்போவதாக அறிவித்ததால் ஆலய பக்தர்கள் உள்ளிட்டோர் மத்தியில் குழப்பமான சூழ்நிலை உருவாகியது

திருவெம்பாவை உபயகாரர்களும் ஆலயத்தினுடைய பக்தர்களும் திருவெம்பாவை உற்சவம் நடைபெறாமல் பாலஸ்தாபனம் செய்வது தமது ஊருக்கு உகந்ததல்ல என்ற ரீதியிலே அந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

பாலஸ்தாபன நிகழ்வை எதிர்வரும் நாலாம் திகதி செய்யக்கூடாது என தடை உத்தரவென்றினை கோரி திருவெம்பாவை உபயத்தை மேற்கொள்கின்ற ஐந்து திருவிழா உபயகாரர்கள் மற்றும் ஆலயத்தினை வழிபடுவர்கள் சார்பில் ஊர்காவற்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இடைக்கால கட்டளை வழுங்கப்பட்டுள்ளது. (ம-104)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்களான
**பத்மப்பிரியா சுதர்சன்** அவர்களின் பாசமிகு தந்தையாரும்
ஆசிரியை **வளர்மதி ராஜ்குமார்** அவர்களின்
பாசமிகு மாமனாருமான



## கனகசபை இராஜேஸ்வரன்

**பிறப்பு : 26.03.1946 இறப்பு : 28.11.2022**

அவர்கள் நேற்றுக் காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**யாழ். இந்து மகளிர் கல்லூரி சமூகம்**

(C-5356)

# மரண அறிவித்தல்



## திருமதி கோபாலகிருஷ்ணன் பூலோகம்

**தோற்றம் : 18.04.1953 மறைவு : 28.11.2022**

செல்விவளவு இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலகிருஷ்ணன் பூலோகம் அவர்கள் நேற்று (28.11.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன் - அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கோபாலகிருஷ்ணன் அவர்களின் அன்பு மனைவியும் கிருஷாந்தன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - காணி மற்றும் மாவட்டப் பதிவகம், பருத்தித்துறை), ருசியந்தன் (ஆசிரியர் - யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்), கிருஷ்ணானந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், பருத்தித்துறை), அனுசாந்தன் (கனிஷ்ட தொழில்நுட்பவியலாளர் - இலங்கை மின்சார சபை, சாவகச்சேரி), கிருஷ்ணப்பிரியா (வைத்தியர் - ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை), மகிழ்ப்பிரியா (உத்தியோகத்தர் - இலங்கை வங்கி வல்வெட்டித்துறை), புவிசாந்தன் (கணித ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சித்திராங்கி (ஆசிரியை - யா/ தாளையடி றோ.க.த.க பாடசாலை), சிவநந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கரவெட்டி), கவிச்செல்வம் (ஆசிரியர் - மு. விசுவமடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிசானன், அபிசாந் (யா/ஹாட்லிக் கல்லூரி), ருஷானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் பிள்ளை (கனடா), ஈஸ்வரி (ஓய்வுநிலை பிரதி அதிபர் - யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ), சிவம் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் - வடமராட்சி வலயம்), யோகலிங்கம் (கனடா), ஸ்ரீநவக்கிளி (கனடா), ஈஸ்வரலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னத்துரை (கனடா), குட்டித்தம்பி, சிவசாந்தி (ஆசிரியை - யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), உமா (கனடா), ரகுமதி (கனடா), கௌரி (சுவிஸ்), மகேஸ்வரி, தம்பிமுத்து, இராஜேஸ்வரி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற விஜயம் மற்றும் இராஜலக்ஷ்மி, கணேசலிங்கம், ரசிதகலா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், சிவாஸ்கர், செந்தீரன், யாழேந்திரன் (கனடா), ஆகியோரின் சிறியதாயாரும் குணாளன் (விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் ஆசையம்மாவும் கார்த்தி ஆழன் (சித்த மருத்துவர்), கார்த்திஆனந் (கணித பாட ஆசிரியர்), கார்த்திகாயன் ( பேராதனை பல்கலைக்கழகம்), கார்த்தியப்பிரசாந், கார்த்தியப்பிரகாஷ், கார்த்தியப்பிரியன் (யா/விக்னேஸ்வராக் கல்லூரி), பிரியங்கா, உமையங்கா, வாரணன், கார்த்தியா, கார்த்தின் (கனடா), கார்த்தியன், கார்த்திமணிரா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.11.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வதியும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-5361)


செல்விவளவு,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

021 226 4622
077 699 7195
077 440 2241

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் நினைவேந்தல் நாள் நிகழ்வுகள்





தாயக விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களுக்கு லண்டன் மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவேந்தல் நிகழ்வு மிகவும் உணர்வுபூர்வமான முறையில் நினைவுகூரப்பட்டுள்ளது. (நி)

# அதிகாரப்பகிர்வோ காணி அதிகாரமோ தமிழருக்கு ஒருபோதும் வழங்கக்கூடாது

## மீண்டும் மீண்டும் பேரினவாதத்தை கக்கும் சரத் வீரசேகர

(கொழும்பு)

**வடக்கு கிழக்கிற்கு அதிகாரங்களை விஸ்தரித்தாலும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே காணப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மீண்டும் தெரிவித்துள்ளார்.**

மேலும் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்ட போதும் அந்த உரிமைகளை தமிழ் தலைமைகள் பாதுகாத்துக் கொள்ளவில்லை எனவும் கடுமையாக சாடியுள்ளார்.


சமகால அரசியல் நிலவரம் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

"அதிகாரப் பகிர்வு என்பது சாத்தியமற்றது. அரசியல் மற்றும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு தமிழ் அரசியல் தலைமைகள் தங்களை வளப்படுத்திக் கொள்கிறார்கள்.

அதுமட்டுமன்றி, நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த 29 ஆயிரம் வீரர்களின் தியாகத்தை மலினப் படுத்த போவதில்லை.

மேலும், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக்கொண்டு நாட்டை பிளவுபடுத்த ஒருபோதும் இட மளிக்க மாட்டோம்" என்றும் அவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார். (நி)



சுவீடன் உப்சலா பல்கலைக்கழக பேராசிரியர் பீற்றர் சால்க் கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்ததுடன் "தமிழ் மண்ணிலுள்ள சமயங்கள் தொடர்பாக உப்சலா பல்கலைக்கழகத்தில் ஆய்வுகளை மேற்கொண்ட யாழ்ப்பாண புலமையாளர்கள்" என்னும் தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந் நிகழ்வை யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை, உயர் பட்டப் படிப்புக்கள் பீடம் ஆகியவை இணைந்து ஒழுங்கமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எரிவாயு தட்டுப்பாடு விரைவில் நீங்கும்

## லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி முதல் ஒரு இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை நாளாந்தம் சந்தைகளுக்கு விநியோகிக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் அதிக கேள்வி இருப்பதாலும் முற்பதிவு செய்யப்பட்ட எரிவாயு கப்பல்கள் நாட்டுக்கு வருவதில் ஏற்பட்ட தாமதமும் வரையறுக்கப்பட்ட விநியோகத்துக்கு காரணம் என்று நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

4,000 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று நாளை புதன்கிழமை நாட்டை வந்தடையவுள்ளதாகவும் அதைத் தரையிறக்கிய பின்னர், விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு டிசெம்பர் மாதத்தில் 34,000 மெற்றிக்தொன் சமையல் எரிவாயுவுக்கான முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனவரி வரை கப்பல்கள் தொடர்ந்து வருகை தரும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# காரைநகர் காணி சுவீகரிப்பு முயற்சி மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது




(அராலி)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/44 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள, 44 குடும்பங்களுக்குச் சொந்தமான 11 ஏக்கர் காணிகளை நேற்று இராணுவத்திற்கு அளவிடும் முயற்சி அப்பகுதி மக்களின் எதிர்ப்பையடுத்து கைவிடப்பட்டது.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

நாங்கள் சொந்த காணிகள் இல்லாமல் வாடகை வீடுகளில் இருந்து மழையிலும் வெள்ளத்திலும் அல்லல்படுகின்றோம்.

இந் நிலையை கருத்தில் கொள்ளாது இராணுவத்தினருக்கு காணி அளவிடுவதற்கு முயற்சிப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அண்மையில் வடக்கு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மக்களது காணிகளை மக்களுக்கே வழங்குவதாக ஆளுநர் தெரிவித்த நிலையில் நேற்று நில அளவை திணைக்களத்தினர் காணி அளவீட்டிற்கு வருகை தந்திருந்தனர்.


காரைநகர் பிரதேச செயலர் தமக்கு காணி அளவிடுமாறு அறிவித்தல் வழங்கிய நிலையிலேயே தாங்கள் காணி அளவிடுவதற்கு வருகை தந்ததாக நில அளவை திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இவ்வாறு காணி சுவீகரிப்பு நடவடிக்கை தொடருமானால் போராட்டங்களும் தொடரும் என மக்கள் தெரிவித்தனர். குறித்த போராட்டத்தில் காணியின் உரிமையாளர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், சமூக மட்ட அமைப்புகள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
30
.
08
.
1930



மறைவு
28
.
11
.
2022

## திருமதி தெய்வானை பஞ்சாட்சரம்

நெல்லியடி மத்திய கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி தெய்வானை பஞ்சாட்சரம் (ஓய்வுநிலை ஆசிரியர்) நேற்று (28.11.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - வேதாத்தை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராம நாதன் பஞ்சாட்சரத்தின் அன்பு மனைவியும் குமாரசூரியர், காலஞ் சென்ற தம்பித்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் தயாபரன், சிவராசா தேவகி (லண்டன்), பகீரதன் (கட்டார்), வரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2022) செவ்வாய்க் கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:* குடும்பத்தினர்
077 036 2384
(சிவசக்தி இரும்பகம், நெல்லியடி)

(C-5359)

## பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ணம்-2022

# சென்றலைட்ஸ் அணி வெற்றி



மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகம் 3 ஆவது தடவையாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட தொடரில் 20 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

தொடரின் மேல் பிரிவில் 13 கழகங் களும் (யாழ். சென்றல், சென்றலைட்ஸ், விக்ரோறியன்ஸ், சிறி காமாட்சி, மானிப் பாய் பரீஸ், T.L.C.நியூஸ்ரார், விக் டோறி, டிறைற்றோன், ஹாட்லியையிற்ஸ், அரி யாலை சென்றல், டிறிபே க்ஸ்ரார், வீங்ஸ்), கீழ்ப் பிரிவில் 12 கழகங்களும் (ஸ்ரான்லி, பற்றீசியன்ஸ், ஜொலிஸ்ரார், கிரா ஸ்கொ ப்பர்ஸ், யாழ். ஜொனியன்ஸ், றெயின்போ, ஓல்ட்கோர் ல்ஸ், T.YMHA, AB, யூனி யன்ஸ், ஸ்கந்தாஸ்ரார், கே.சி.சி.சி பங்கு பற்றுகின்றன.

முதலாவது போட்டியில் சென்றலைட்ஸ் அணியும் விக்டோறியன்ஸ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற விக்டோறியன்ஸ் அணி களத்தடுப்பை தீர்மானித்தபடியால் முதலில் துடுப்பெடுத் தாடிய சென்றலைட்ஸ் அணி 20 ஓவர் களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

கௌதமன் 19, இயவரசன் 20, டார்வின் 14, நிரோஜன் 26 ஓட்டங்க ளைப் பெற்றனர். விஜியகுமார் -2, சிவனுஜன் 2, பிரதீஸ் 2 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

148 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு கள மிறங்கிய விக்ரோறியன்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது.

கிருஷாந்தன் 11, விஜியகுமார் 15, பிரதீஸ் 44 ஓட்டங்களைப் பெற்றனர்.

இயவரசன் 2, டார்வின் 1, அலன் 2, ஜெரிக், வியன்ஸ்காந், மயூரன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இப் போட்டியின் சிறந்த வீரராக விக்ரோறி யன்ஸ் வீரர் பிரதீஸ் தெரிவு செய்யப்பட டார். (6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2737


**மூர்த்தி**

மனசுக்குள்ள நிறைய இருக்கும் ஆனா எழுத வராது அது லவ் லெட்டர்.



மனசுக்குள்ள ஒன்னுமே இருக்காது ஆனா நிறைய எழுதுவோம் அது செமஸ்டர்

**லட்சுமி**



இந்த உலகத்தில நல்லவங்கள நீங்க எங்கு தேடினாலும் கிடைக்க மாட்டாங்க. ஏன்னா நான் தான் வீட்டுகுள்ளே இருக்கேன்னே.

**ஜீவா**

நாம் எவ்வளவு தான் வளர்ந்து விட்டாலும் ஜன்னலோரப் பயணம்



நமக்குள் ஒளிந்திருக்கும் குழந்தைத்தனத்தை சிறிது நேரம் தட்டி எழுப்பத்தான் செய்கிறது.

**காவியா**

இறைவன் கொடுக்கும் செல்வங்களில் மிகப் பெரிய செல்வம் பெண் பிள்ளைகள். ஆனால் பெற்றுக்கொண்ட சிலர் இதைப் புரிந்து கொள்வதில்லை.



**மனோகர்**




**காதம்பரி**

மாணவன்-சார் பரீட்சை பேப்பர்ல முட்டை போடாதீங்க
ஆசிரியர்-ஏன்டா
மாணவன் -புரட்டாசி மாதம் விரதம் சார்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி
## தனியார் பாதுகாப்பு சேவை
## பெற்றுக் கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2023

1. கரைச்சி பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களுக்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 2022.11.29 - 2022.12.14 பி.ப 02.00 மணிவரை**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி - 2022.12.15 பி.ப 14.00 மணிவரை**

**கேள்வி திறக்கும் திகதி - 2022.12.15 பி.ப 14.30 மணி**

2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
4. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 14.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 1,000.00 இனையும், மீளளிக்ககூடிய வைப்புப் பணமாக ரூபா 10,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவத்தில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு "தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
6. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
7. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக கரைச்சி பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
9. மேலதிக விபரங்கள் அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 01 | வாகன சுத்திகரிப்பு நிலையம், நாகபூசணி அம்மன் வீதி, திருநகர், கிளிநொச்சி | 01 | 01 | 01.01.2023 – 31.12.2023 |
| 02 | தீயணைப்புப்பிரிவு, A9 வீதி, கரடிப்போக்கு சந்தி கிளிநொச்சி | 01 | 01 | |

**தலைவர், பெறுகைக்குழு**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

(சி-5354)

# மீனவர்களுக்கு ஓய்வூதியத்திட்டம்

(கொழும்பு)

நாட்டில் மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் மூலம் மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்துள்ளார். (ஙி)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலராக
01 . 12 . 1942



சருகாக
09 . 12 . 2021

திதி- 29.11.2022

அமரர்.திருமதி.

## சிவானந்தன் செல்வமலர்

உருண்டோடின ஓர் ஆண்டு அம்மா!
எப்பொழுதும் மழைத்தூறலாய்
உங்கள் நினைவு எம் மனதில்
நனைந்த காடாய் கிடக்கின்றன
அப்பாவை இழந்த துயர் ஆறும் முன்னே
உங்கள் பிரிவு எம்மை வாட்டுதம்மா
துயருறு பிள்ளைகள் நாங்கள்
பரிதவித்து நிற்கின்றோம்!
இருந்தும் உங்கள் ஆத்மா
ஆலடிப் பாலகணபதியான் பாதம்
சரணடைய வேண்டி நிற்கின்றோம் அம்மா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-5351)

'செல்வமஹால்'
அல்வாய்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இராசிபலன்

29.11.2022
கார்த்திகை 13, செவ்வாய்க்கிழமை
சஷ்டி பிற்பகல் 4.10 மணிவரை

திருவோணம் பிற்பகல் 1.49 மணிவரை
சுபநேரம் -10.43-12.13 மணிவரை
இராகுகாலம் - 3.13-4.43 மணிவரை

சஷ்டி விரதம்
சந்திராஷ்டமம்
புனர்பூசம், பூசம்.

**வளவன்**



மேஷம்

வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.



கடகம்

சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும்.



துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.



மகரம்

ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.



ரிஷபம்

குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்கள் அகலும், அரைகுறையாக இருந்த காரியங்களில் மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.



சிம்மம்

மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.



விருச்சிகம்

சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வளர்ச்சி கூடும் நாள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.



கும்பம்

சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, சுபகாரியச் செலவுகள் கூடும் வாய்ப்புண்டு.



மிதுனம்

எந்தக் காரியத்தையும் நிதானத்துடன் செய்வது நல்லது, வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.



கன்னி

மனநிறைவு கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.



தனுசு

தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.



மீனம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், அதிர்ஷ்டகரமான நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

மறதிய பிரது வெறும் அடிவரை தந்திடும் வேதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. ஊழியர்களின் திடீர் பணிப்புறக்கணிப்பு

## யாழில் பொதுமக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)
இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாண சாலை பணியாளர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.




யாழ்ப்பாணம் வயாவிளான் பகுதியில் கடந்த புதன்கிழமை இலங்கை போக்குவரத்து சபை



க்குச் சொந்தமான பேருந்து மோதியதில் மாணவன் காயமடைந்த விபத்துச் சம்பவத்தின் போது, இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சாரதி மீது அங்கிருந்தவர்கள் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

சாரதி மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய தாக்குதலாளிகளையும் பொலிஸார் கைது செய்ய வேண்டும் எனவும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரியே குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தினுள் பேருந்துகளை நுழைய விடாது தடுப்புக்களை போட்டுள்ளனர். அதனால் வெளி மாவட்ட பேருந்துகள், பேருந்து நிலையத்தினுள் நுழைய முடியாததால் வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

திடீரென நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையால், தூர இடங்களுக்கு வேலைக்கு செல்வோர், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் அவதிக்கு உள்ளாகியிருந்தனர். (நி-6-33-104)

# க.பொ.த.சா/தரப் பரீட்சைப் பெறுபேறுகள்-2021

### யாழ்/அச்சுவேலி மத்திய கல்லூரி

எஸ்.அபிராம்-8ஏபி, கே.தருஜன்-8ஏபி, பி.ரிஷ்ஷாந்த்-7ஏபிசி, வி.மகிராஜ்-7ஏபிசி, எல்.கிருத்திகன்-6ஏபி2சி, எஸ்.ஆர்த்திகன்- 6ஏ3பி, எஸ்.ஜகிந்தன்-6ஏ3பி, ஆர்.கிசாளன்-5ஏ3பிசி, கே.வினுஸ்ரன்-5ஏ4சி.

### யாழ்/வட்டு மத்திய கல்லூரி

எஸ்.ரேனுஜா-9ஏ, கே.சிவகாமி-8ஏசி, ஏ.டயானிகா-6ஏபி2சி, கே.சானுஜா-5ஏ2பி2சி.

### யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்

என்.சஞ்சனா-9ஏ, எஸ்.பவித்திரா-9ஏ, எம்.அபர்னிகா-9ஏ, கே.ஆதித்தன்-9ஏ, எம்.ரேவதி-8ஏபி, கே.கஜகாயினி-8ஏபி, எஸ்.அபிஷனா-8ஏபி, பி.டிலோஎழில்நிலா-8ஏசி, ரி.கிருஸ்ணவி-7ஏபிசி, யே.சாம்பவி-7ஏபிசி, எஸ்.ஸஜித்ரா-7ஏ2சி, எல்.சந்தியா-6ஏ3பி, ஆர்.அரவிந்தன்-6ஏ3பி, கே.வேணுமதி-6ஏ2பிசி, கே.ராக்வன்-5ஏ3பிசி.



யாழ்/பெரியபுலம் மகா வித்தியால்யத்தில் 2022 ஆம் ஆண்டிற்கான நூலக வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கடந்த 27 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் நூலகக் கண்காட்சி இடம்பெற்றது.

# கடல் அட்டைப் பண்ணை அமைக்க மீனவர்கள் எதிர்ப்பு

(அராலி)
அராலிப் பகுதி கடலில் அட்டைப் பண்ணை அமைப்பதற்கு அங்கிருக்கும் மீனவர்கள் கடுமையான எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மீனவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் கடற்றொழிலினையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தி வருகின்றோம். தற்கால பொருளாதார நெருக்கடியால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இங்கே வருகை தந்த சிலர் குறித்த கடற்பரப்பில் கடல் அட்டைப் பண்ணை அமைப்பதற்கு பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

எமது கடலில் இப் பண்ணை அமைக்கும் முயற்சியினை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறு அட்டைப் பண்ணைகள் இங்கே அமைத்தால் கடலில் உள்ள வளங்கள் அழியும்.

கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கம் பாதிக்கப்படும். கடல்வாழ் உயிரினங்கள் அழிந்தால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (நி-6-104)

# குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரான சேர்.பொன் இராமநாதனின் 92 ஆவது குருபூசைத் தினம் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்திலுள்ள சேர்.பொன் இராமநாதனின் திருவுருவச் சிலைக்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சி.ஸ்ரீசற்குணராஜா மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெறும். (நி-6)

# பொன்னாலையில் மின் உற்பத்திக் கோபுரங்கள் அமைப்பது தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
பொன்னாலையில் Musal petti Wind Power (PVT) Ltd நிறுவனத்தினரால் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் அமைப்பது தொர்டர்பான கலந்துரையாடல் நேற்று வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

பொன்னாலை தொடக்கம் அராலி வரையான கடற்கரையோரத்தில் 15 காற்றாலைக் கோபுரங்களை அமைப்பதற்கு



மேற்படி நிறுவனத்தினால் இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இக்கோபுரங்களை அமைப்பதில் உள்ள சாதக, பாதக அம்சங்கள் தொடர்பாக சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டுவதற்காக இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இடத்தெரிவு தொடர்பாக கிராமமட்டத்தில் பொதுமக்களுடன் கலந்துரையாடி இறுதி முடிவு எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத திட்டங்களாயின் அதனை செயற்படுத்த முடியும் என இங்கு கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகளும் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர். (நி-6-33-100)



தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தையிட்டி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் மேல்மாடிக் கட்டடத் திறப்பு விழா வைபவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (படம்:சுபேசன்)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 350 | 280 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 200 | 200 |
| தக்காளி | 300 | 300 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 150 | 180 | 160 |
| கோவா | 250 | 250 | 280 | 300 |
| கரட் | 300 | 440 | 450 | 500 |
| பூசணி | 120 | 150 | 120 | 160 |
| புடோல் | 250 | 280 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 140 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 600 | 650 | 600 | 800 |
| பெரிய வெங்காயம் | 350 | 200 | 220 | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 450 | 500 |
| வெண்டக்காய் | 120 | 140 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 120 | 160 |
| பயற்றங்காய் | 250 | 400 | 300 | 300 |
| லீக்ஸ் | 350 | 380 | 460 | 500 |
| பீற்றூட் | 350 | 280 | 450 | 500 |
| கறிமிளகாய் | 600 | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 800 | 800 |
| போஞ்சி | 350 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 200 | 200 | 200 | 200 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 320 | 250 | 260 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | 450 | 500 |
| முள்ளங்கி | 160 | 140 | 220 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 45 | 40 |
| ஈரப்பலா | 80 | 120 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழங்குநரை பதிவு செய்தல்
# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி-2023

| தொகுதி (A) | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதி எழுதுபொருட்கள் |
| A - 02 | அலுவலக உபகரணங்கள் (தளபாடம்) |
| A - 03 | சித்த மருத்துவ மருந்துகள் |
| A - 04 | நூலக நூல்கள் |
| A - 05 | துணி வகை |
| A - 06 | கட்டட பொருட்கள் |
| A - 07 | கல்,மணல் |
| A - 08 | தீந்தை வகை |
| A - 09 | நீர்க்குழாய் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள் |
| A - 11 | மின் வழங்கு பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள் |
| A - 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கி |
| A - 13 | இரும்புப் பொருட்கள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 15 | பனைமரங்கள், சலாகைகள் |
| A - 16 | வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலம் |
| A - 17 | கணினி, அச்சுப்பொறி, பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல், நச்சுநிரல் எதிர்ப்பான், செருகி மற்றும் இவற்றிற்கான உதிரிப்பாகம் |
| A - 18 | சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 19 | பாதணிகள், தோல் பொருட்கள், மழை அங்கிகள் |
| A - 20 | அலங்காரப் பொருட்கள் |
| A - 21 | இலத்திரனியல் பொருட்கள் |
| A - 22 | மரக்கன்றுகள் (பழமரங்கள், நிழல்தரும் மரங்கள், பூங்கன்றுகள் முதலியன) |
| A - 23 | சிற்றுண்டி மற்றும் உணவு வகைகள் |
| A - 24 | கழிவகற்றும் கூடைகள் |

| தொகுதி (B) | சேவைகள் |
|---|---|
| B - 01 | அச்சிடுதல்,பதாதைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல் கட்டுதல் |
| B - 02 | மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்தல் |
| B - 03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல் |
| B - 04 | ஒட்டு வேலைகள், உலோக வேலைகள் |
| B - 05 | கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடுதல் |
| B - 06 | மின்சாரத்திருத்தம் |
| B - 07 | இலத்திரனியல் சாதனத்திருத்தம் |
| B - 08 | வாகனங்கள் சுத்திகரிப்பு |
| B - 09 | கோலவுடை தைத்தல் |
| B - 10 | கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு |
| B - 11 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B - 12 | வீதி விளக்குகள் பொருத்துதல் |
| B - 13 | வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலைகள் |
| B - 14 | கழிவகற்றல் சேவை (Gully emptier Service) |

| தொகுதி (C) | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C-01 | குழாய்க்கிணறு அமைத்தல் |
| C-02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C-03 | கட்டிட நிர்மாணமும் திருத்தமும் |

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1,000 (வரிகள் நீங்கலாக) அறவிடப்படும். கட்டணத்தை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் (காலை 9:00 - மாலை 3:00 மணி வரை) செலுத்தி படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2023"** எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **"தவிசாளர், தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 2022.12.15 வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021-228-5761 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-5352)



பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"அனைத்து வேலைத்தளங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பதும், இல்லாதொழிப்பதும் நம் எல்லோருடைய கடமையும் பொறுப்புமாகும்"

(C-5323)

JSAC

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)


# தொலைபேசிகள் மற்றும் டேட்டா கட்டணங்களை குறைக்க எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

பொதுமக்கள் செலுத்தும் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இணைய சேவைக்கான கட்டணங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று காலை வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இணைய சேவைக்கான கட்டணத்தில் விலையேற்றம் ஏற்படுத்திய தாக்கம் குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இவ்விடயத்தில் ஓரளவு என்றாலும் நிவாரணம் வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கயந்த கருணாதிலக்க கேட்டுக்கொண்டார். (நி)

# சிறந்த புகைப்பட பட்டியலில் இடம்பிடித்த கோட்டாவின் அலுவலக புகைப்படம்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டின் சிறந்த 100 புகைப்படங்களுக்குள் இலங்கை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திய அலுவலகத்தின் புகைப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது.



கொழும்பில் உள்ள ஜனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அலுவலகத்தின் புகைப்படம் சர்வதேச டைம் சஞ்சிகையின் சிறந்த புகைப்படமாக தெரிவாகியுள்ளமை சர்ச்சையை கிளப்பியுள்ளது.

இந்த புகைப்படமானது 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி அன்று ஆர்ப்பாட்டக்காரர்களினால் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றிய போது எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா:சூரி 10 செவ் 6 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13158 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா:சூரி, செவ் 1 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:BA,MA( Music)<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/11255 |
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா:55 சூரி, செவ் 7 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்: H.N.D.A பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/13159 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம் 4<br>கி.பா:32 ½ சூரி 01 செவ் 12 இல்<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்:BA, பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம்<br>தொ.இ:G/11258 |
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா:12 சூரி 9 செவ் 10 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: O/L (கட்டார்)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13162 | பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி 2<br>கி.பா:6 சூரி 4 செவ் 3 இல்<br>உயரம்:160 cm<br>தகைமை/தொழில்: BSc அரச உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/11279 |
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: மிருக சீரிடம் 4<br>கி.பா:34 சூரி 8 செவ் 9 இல்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்:A/L (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: A/L இற்கு மேல் படித்த பெண்<br>தொ.இ: B/13163 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா:18 சூரி, செவ் 10 இல்<br>உயரம்:5' 1"<br>தகைமை/தொழில்: BSc (stats) (அவுஸ்திரேலியா)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/11289 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/சன்மார்க்க ம
# திரு.முருகேசு முரளிதர



## அருளாசிச் செய்தி

அன்புள்ளவருக்கு. கல்விக்காக என்றும் அரும்பணி ஆற்றி பல்லாயிரக்கணக்கான மாணவர்களை அர்ப்பணிப்புடன் உருவாக்கி அறுபது அகவையை தொட்டு நிற்கும் யாழ்ப்பாண சன்மார்க்க மகா வித்தியாலய அதிபர் திரு. முருகேசு முரளிதரன் அவர்களுக்கு இன்று மணிவிழா கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். ஆசிரியராக. அதிபராகப் பதவி வகித்து நல்லதொரு மாணவர் பரம்பரையை உருவாக்கிய பெருமைக்குரியவருக்கு மணிவிழா எடுப்பது சாலவும் பொருந்துமே. பண்பான. சமயப்பற்றான. ஒழுக்கமான. புனிதமான கல்விப் பணியை ஆற்றிய பெருமை அதிபர் அவர்களைச் சாரும். இவரது சேவையை கௌரவிப்பதில் மகிழ்வடைவதுடன் நீண்ட ஆயுளும் நீடித்த சுகத்தையும் இறைவன் வழங்க வேண்டும் என இறை இன்பத்துடன் வாழ்த்துகின்றேன்.

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் இரண்டாவது குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**



## ஆசிச்செய்தி

"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியின் அருள்மொழிக்கு இலக்கணமாக விளங்குபவர் யா/சன்மார்க்க மகா வித்தியாலய முதல்வர் திரு. முருகேசு முரளிதரன் அவர்கள். கல்விப்பணி மேன்மையானதும் உயர்வானதுமாகும். அத்தகைய கல்விப் பணிக்கு சேவையாற்றும் கல்வியாளர்கள் காலவெள்ளத்தால் அடித்துச் செல்லக்கூடியவர்கள் அல்லர். மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் உயர்வான இலக்கினை எட்ட தனக்கே உரித்தான பாணியில் சாதனை படைக்கும் ஒரு சாதனையாளன்.

இவர் தனது இலட்சியப் பாதையில் வீறுநடை போட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றி இருக்கின்றார். மணிவிழா நாயகரின் எதிர்காலம் வளமாக அமைய திருவருள்மிகு அரசடி விநாயகரின் திருவருளை வேண்டி எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**அருள்மிகுவண்ணை ஸ்ரீ அரசடிவிநாயகர் தேவஸ்தானம் பிரதம குரு சிவஸ்ரீ உ.கிருபானந்தக்குருக்கள்**



## ஆசிச்செய்தி

யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் அதிபர் என்கின்ற உயர்ந்த கனதியான பணியை காத்திரமாக ஆற்றிய உயர்திரு முருகேசு முரளிதரன் அவர்கள் 30.11.2022 அன்று ஓய்வு பெறுகிறார். அதிபராகப் பணியாற்றிய காலத்தில் பாடசாலை மாணவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பல சாதனைகளை கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் நிகழ்த்தப் பக்கபலமாக நின்றதோடு சரியான வழிகாட்டலையும் ஆற்றல்மிக்க தலைமைத்துவப் பணியையும் ஆற்றியிருந்தார்.

இயல்பிலேயே மற்றவர்களை ஈர்க்கும் திறன் கொண்டவர். மாணவர்கள்,ஆசிரியர்களை மட்டுமன்றி சகல அதிபர்கள், கல்விஅதிகாரிகளையும் தன் பொறுமையான பணியால் ஈர்த்துள்ளார். எதிர்காலச் சமூகத்தை உருவாக்கும் இப்பணியின் ஆளுமைக்காக எனது நன்றி நிறைந்த பாராட்டுக்கள். இத்தகைய சிறப்புமிக்க அதிபரின் ஓய்வுக்காலம் ஆரோக்கியமாகவும் சிறப்பாகவும் அமையவேண்டும்.

**யா/புனிதபத்திரிசியார் கல்லூரி அதிபர்**
**அருட்திரு அ.பி. திருமகன்**



## வாழ்த்துச் செய்தி

யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி 30.11.2022 அன்று மணிவிழாக் காணும் திரு. முருகேசு முரளிதரன் அவர்களின் கல்விச் சேவையை பாராட்டுவதுடன் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தில் அதிபராக நியமனம் பெற்று கடமையாற்றியிருந்தார். அதிபராகக் கடமையாற்றிய காலங்களிலே தன் சிறப்பான தலைமைத்துவத்தை வெளிப்படுத்தி பாடசாலையின் கல்விச் செயற்பாட்டு வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார். 2009 ஆம் ஆண்டிலே பெருமளவான மாணவர்கள் சித்தியடைந்து வலய மட்டத்தில் மூன்றாம் இடத்தினையும் மாவட்ட மட்டத்தில் பத்தாம் இடத்தினையும் பாடசாலை பெற்றமை இதற்குச் சான்றாகும்.

யா/ சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் இவரது காலத்திலே முதல் முறையாக புலமைப் பரிசில் பரீட்சையிலே மூன்று மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர். 2014/2015 காலப்பகுதிகளிலே உயர் தரத்திற்கு தோற்றிய மாணவர்கள் மூன்று பாடங்களிலுமே Aசித்தியினை பெற்று பல்கலைக்கழகம் சென்றிருந்தமை பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணியினை நினைவு கூருகின்றது.

இதுமட்டுமன்றி 2014 இல் பாடசாலையின் சிறந்த செயற்பாட்டிற்கான சான்றிதழ் மத்திய கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் சர்வதேச கலைத்திட்டத்துடன் இணைந்த கலைத்திட்டச் செயற்பாடுகளிற்காக மூன்று தடவைகள் விருது வழங்கப்பட்டிருந்தது. இவரது தலைமைத்துவம் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளிற்காக 2016 இல் "குரு பிரதீபாபிரபா" விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது சேவையினைப் பாராட்டி மணிவிழாவிற்கான எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**வடக்குமாகாணகல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறைமற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளர்.திரு.இ. வரதீஸ்வரன்**



## வாழ்த்துச் செய்தி

சைவப் புலவர். சித்தாந்த பண்டிதர் திருவாளர் முருகேசு முரளிதரன் அவர்கள் எமது மாணவர்களின் கல்வித் துறை வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்து உழைத்த பெருந்தகையாவார்.

ஆசிரியராக. பாடசாலை அதிபராக செயற்பட்டிருந்த முருகேசு முரளிதரன் அவர்கள். தான் பணியாற்றிய பாடசாலைகளை அனைத்துத் துறைகள் சார்ந்தும் முன்னேற்றகரமான நிலைக்குக் கொண்டு வந்தவர். இதற்கென நல் அதிபருக்கான விருதும் அவருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளமை அவருக்குக் கிடைத்த மகத்தான கௌரவமாகும்.

அத்துடன்.அவர் அதிபராகக் கடமையாற்றிய பாடசாலையில் ஆய்வு கூடத்திற்கான விருது. கலைத்திட்டச் செயற்பாடுகளுக்கான விருதுகள் என்பவற்றையும் பெற்றுள்ளார். அவரது பணியானது எமது மாணவர்களின் நல் வளர்ச்சியில் பெரிதும் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவரது இத்தகைய சேவைகளுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர் பாடசாலைப் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும். அவரது சேவையானது எமது சமூகத்தின் நலன் சார்ந்து பல்துறைகளிலும் தொடர வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் விடைபெறுகின்றேன்.

**கடற்றொழில் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் செயலாளர் நாயகம் – ஈ.பி.டி.பி கௌரவ டக்ளஸ் தேவானந்தா**



## வாழ்த்துச் செய்தி

ஆசிரியராகப் பதவியேற்ற காலம் தொடக்கம் தனது ஓய்வு காலம் வரை சிறந்த ஆசிரியராக. அதிபராகக் கடமையாற்றி மாணவர்களுக்கு சிறந்த கல்வி. ஒழுக்கத்தைப் போதித்து 30.11.2022 அன்று அறுபதாவது அகவை காணும் திரு. மு.முரளிதரன் அதிபர்.[யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்] அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவர் நேரம் காலம் பாராது உழைத்து மாணவர்கள். சக ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களிடம் அன்பு பாராட்டியதுடன். அவர்களுக்குத் தனது ஊக்கத்தையும் வழிகாட்டல்களையும் கொடுத்தவர். தனது கடமையில் இருந்தும் பொறுப்புக்களில் இருந்தும் சற்றும் விலகாது செயற்பட்டவர். அவரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும் ஆரோக்கியம் நிறைந்ததாகவும் அமைய எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**யாழ்.மாநகரசபை முதல்வர்**
**கௌரவ வி.மணிவண்ணன்**



## வாழ்த்துச் செய்தி

யா/சன்மார்க்க மகா வித்தியாலய அதிபர் திரு. மு.முரளிதரன் அவர்களது மணிவிழாவையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை.க.பொ.த (சா.த) பரீட்சை.க.பொ.த (உ.த) பரீட்சை என்பவற்றில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளினைப் பெறுவதற்கு இவர் வழிகாட்டியாக இருந்து செயற்பட்டார்.

2016 ஆம் ஆண்டு நல் அதிபருக்கான விருதினைப் பெற்றுக் கொண்ட இவர் யா/சன்மார்க்க மகா வித்தியாலயம் தேசிய ரீதியில் ஆய்வு கூடங்களிற்கான போட்டி. சிறந்த செயற்பாடுகளிற்கான போட்டி. சர்வதேச கலைத்திட்டத்துடன் இணைந்த கலைத்திட்டச் செயற்பாடுகள் என்பவற்றில் விருதுகளைப் பெறுவதற்கு அரும்பணி ஆற்றியுள்ளார். அகவை அறுபதில் மணிவிழாக் காணும் இவ்வேளையில் இவர் கல்விப் புலத்திற்கு ஆற்றிய பணிகளிற்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**வடமாகாணக் கல்விப்பணிப்பாளர்**
**திரு.செ.உதயகுமார்**



## வாழ்த்துச் செய்தி

அகவை அறுபதை அடைந்து ஆளுமைப் பொலிவில் மிளிர்ந்து சீர்மிகு சிறக்க மணிவிழாக் காணும் வடபுலத்தின் கல்விக் கண்ணாம் யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்திட்ட சன்மார்க்க மகா வித்தியாலய அதிபர் "குருபிரதீபாபிரபா" விருது பெற்ற சைவப்புலவர். சித்தாந்த பண்டிதர். நண்பர் முருகேசு முரளிதரன் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள். நாற்பது வருடத்தைக் கடந்துவிட்ட அனுபவ முதிர்ச்சி பணி நிறைவில் பார்போற்ற "பா" ஆகியுள்ளது.

கடந்து வந்த காலங்கள் கடும் சவால்களைக் கொண்ட கரடு முரடானவையாக இருந்தாலும் நற்குணமும் சீரிய சிந்தையும் ஆற்றலும் பொருந்திய செயற்றிறன் கல்விக் களத்தில் வெற்றிகளை வென்று தந்தது. உள்ளத்தின் நேர்த்தி உயர்வைத் தரும் என்பதற் கிணங்க 40 வருடங்கள் உன்னத கல்விச் சேவையினை வழங்கி ஓய்வு பெறும் அன்பருக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள் வாழ்க வளமுடன்.

**யாழ்ப்பாணவலயக் கல்விப்பணிப்பாளர்**
**திரு. முத்து இராதாகிருஷ்ணன்**



சைவப்புலவர் சித்தா

## திரு.முருகேசு முர

(அதிபர், யா/சன்மார்க்க ம

வாழ்வியற்

**சுயவிபரம்**

- பதவி: அதிபர் (இ.அ.

**குடும்பவிபரம்**

- பெற்றோர்: க.முருகேசு (பெ
- பிறப்பிடம்: அல்வாய்
- திருமணம் செய்த இடம்: கோப்பாய்
- திருமணம்: 31.05.1992
- மனைவி: யசோதா (ஆசி
  வித்
- பிள்ளைகள்: 1. சாய்ராம் மது
  புதுக்குடியிரு
  2. கோகுலகிரு
  (அலியான்
  3.முரளிதரன்
  (computer E

**கல்வி** **தரம்**

- கல்வி கற்ற பாடசாலை 1-8 யா/வடமத்தி
  (செல்லையா
  9-13 யா/நெல்லி

**சேவை விபரம்**

- முதல் நியமனம்: 21.04.1982
- ஆசிரியராக: யா/சரசாலை
  யா/மட்டுவில் 6
  யா/புற்றளை ம
  யா/புலோலி 6
  யா/ஹாட்லிக்
  யா/அச்சுவேலி
  யா/புத்தூர் ஸ்ரீ
  யா/ஆனைப்ப
- அதிபராக: யா/ஆனைப்ப
  யா/சன்மார்க்க

## வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கா வித்தியாலயத்தின் அதிபர்
# ரன் அவர்களின் மணிவிழா சிறப்பு மலர்



சித்தாந்த பண்டிதர்
## ழரளிதரன் அவர்களின்
ர்க்க மகா வித்தியாலயம்)
வியற் பதிவுகள்

(இ.அ.சேவை - வகுப்பு- I)

கேசு (பொலிஸ் உத்தியோகத்தர்). மு. நாகம்மா
ாய்
ாய்
992
ா (ஆசிரியை. யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்)
ராம் மதுரிக்கா (டிஸ்பென்சர், குடியிருப்பு ஆதார வைத்தியசாலை)
குலகிருஸ்ணன் பிருந்திக்கா
ியான்ஸ் இன்சூரன்ஸ்)
ரிதரன் பிரனேஸ்
puter Engineering student-SLIIT)

வடமத்திய ஆங்கிலப் பாடசாலை
லையா பாடசாலை)
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

982
ாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்,
டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை
றளை மகா வித்தியாலயம்
லாலி மெ.மி.த.க. பாடசாலை
ாட்லிக் கல்லூரி
சுவேலி மகா வித்தியாலயம்
தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி
னைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
னைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்
மார்க்க மகா வித்தியாலயம்



### வாழ்த்துச் செய்தி

உயர்வுகள் பல பெற்று பல மாணவச் செல்வங்களின் அடைவுகளிற்கும் சாதனைகளிற்கும் ஆதார சக்தியாக இருந்து வீறுநடைபோட்ட வேங்கையான யா/சன்மார்க்க மகா வித்தியாலய அதிபர் முரளிதரன் அவர்கள் 40 வருட கால சேவையை அன்பாலே, பண்பாலே அலங்கரித்து இன்று ஓய்வு பெறுகின்றார்.

உடையில் நேர்த்தி, 'அன்றலர்ந்த செந்தாமரையாய்' இன் முகங்காட்டி உரையாடுதல், நேரம் தவறாமை, கடமையில் கண்ணியம், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பினும் அவர்களை அன்பான அரவணைப்பால் வழிப்படுத்தவல்ல ஆளுமையுள்ளம், சிறந்த நிர்வாகி, அன்பான தந்தை, தலைவன் என தான் வகித்த ஒவ்வொரு பதவியிலும் கடமை, கண்ணியம்,கட்டுப்பாடு ஆகிய பண்புகளை முன்னிறுத்திச் செல்லும் அவரது கல்விப் பணியும் சமூகப் பணியும் என்றும் தொடரவும் பேரப்பிள்ளைகள் பல கண்டு குடும்பத்துடன் பேரின்பம் பெற்று நீடூழி வாழவும் இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**யாழ்ப்பாண கல்விக் கோட்டக் கல்விப்பணிப்பாளர்**
**கோட்டக்கல்வி அலுவலகம், திரு.ஆ. யோகலிங்கம்**



### வாழ்த்துச் செய்தி

பொறுமை, மற்றவர்களை மதிக்கும் பண்பு, ஒருவர் சொல்வதை ஆழ்ந்து கேட்கும் ஆற்றல், அவசர முடிவு எடுக்காத பண்பு, எல்லோரையும் சமமாகவும் அதே நேரம் அவரவர் தன்மைக்கு ஏற்ப தேவைகளை நிறைவு செய்யும் ஆற்றல் கொண்டவராக விளங்கியதுடன், கடமையைக் கடவுள் பணியாக மதிக்கும் இயல்பு தான் இவரின் புகழுக்கும் மதிப்புக்கும் காரணமாகும். அதனால்தான் சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் அதிபர்கள் வரிசையில் இவரது காலம்தான் குறித்த சமூகத்தைப் பொறுத்தவரை பொற்காலம் என்று கூறுவதில் பெருமையடைகின்றேன். தனது சேவைக் காலத்தில் எதையெல்லாம் சாதிக்கவேண்டும் என்று எண்ணுவாரோ அதையெல்லாம் தன்பேச்சு மற்றும் ஊடாடல் திறன் போன்றவற்றால் மற்றவர் மனங்களைக் கவர்ந்து பாடசாலையின் தேவைகளை பல இலட்சம் ரூபாய்களினால் நிறைவு செய்த பெருமைக் குரியவர் அதிபர் முரளிதரன் அவர்கள். உண்மையில் கஷ்டத்தில் இருக்கும் மாணவர்களின் உயர் கல்விக்காக நிறைவான கல்வி மற்றும் உணவுக்காக அவர் உழைத்த உழைப்பு மறக்க முடியாதது.

**யாழ்ப்பாணக் கல்விவலய ஓய்வுநிலை பொது நிர்வாக பிரதிக்**
**கல்விப்பணிப்பாளர், திரு. சி. மாணிக்கராஜா**



### வாழ்த்துச் செய்தி

திருவாளர் முருகேசு முரளிதரன் அவர்கள் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் பணியாற்றுபவர். இது இக்கால அதிபர்,ஆசிரியர்களுக்கு மிகவும் அவசியமானது. ஆசிரிய நியமன காலத்தில் இருந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பல்வேறு பணிகளுக்காக தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றிய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரித்தான திரு.மு. முரளிதரன் அவர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பல்வேறு பணிகளை அலங்கரித்து தற்போது சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டத் தலைவராக பணியாற்றியவர். நிறைவான இவரது சேவைக்கு நன்றி கூறுகின்றோம். நல்லுள்ளமும் நற்பண்புகளும் கொண்ட இவரது மணிவிழாவில் வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர்**
**திரு.சராபுவனேஸ்வரன்**



### வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையின் அதிபர் திரு. முருகேசு முரளிதரன் அவர்கள் அகவை அறுபதை அடைவதை ஒட்டி வெளிவரவிருக்கும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பாடசாலையின் பழைய மாணவன் என்ற ரீதியில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு நல்லாசிரியரிடம் எத்தகைய நல்ல பண்புகள் இருக்க வேண்டுமோ அத்தகைய நல்ல பண்புகளும் கொண்டவர் எமது அதிபர். சக ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் இனிமையாகப் பழகும் சுபாவத்தைக் கொண்டிருந்தமையால் ஆசிரியர்களும் மாணவர்களும் இவர் மீது அளவு கடந்த மரியாதை வைத்துள்ளனர்.

மாணவர்களுக்கு நல்ல பழக்கவழக்கங்கள், ஒழுக்க விழுமியங்கள் பண்புகளைச் சொல்லிக் கொடுப்பதுடன் தானும் அவ்வாறே நடந்து காட்டுவார். இவரின் காலத்தில் அதிக மாணவர்கள் க.பொ.த (உ/த) இல் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்றதும் க.பொ.த உயர்தரத்திற்கு அதிக மாணவர்கள் தகுதி பெற்றதும் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக மாணவர்கள் சித்தியடைந்ததும் இவரின் விடா முயற்சிக்குச் சான்றாகும். எமது அதிபரின் அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கு நன்றி கூறுகின்றேன். பணி ஓய்வுபெறும் அதிபர் அவர்களையும் அவர்தம் குடும்பத்தினரையும் இறையருளுடன் வளமுடன் நலமுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

**யா/சன்மார்க்க மகா வித்தியாலய பழைய மாணவன் தேசமான்ய,**
**தேசகீர்த்தி லயன் பா.புரிஸ்குமார்** (M.A.F)

(13605)



### "தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்"

"செயற்றிறன் என்பது தாக்குப்பிடித்து நிற்பதற்கான அடித்தளம். அத்துடன் பயன் விளைவிக்கும் ஆற்றல் என்பது வெற்றிக்கான அடித்தளம்" என்ற தலைமைத்துவப் பண்பை அடிப்படையாகக் கொண்டு எடுக்கும் பதவிகளில் எல்லாம் துலங்கியவர் தான் அதிபர் முரளி அவர்கள்.

அனைவருக்கும் உதவும் இவரது இயல்பான குணம், தனது சிந்தனைகளை எளிமையாகப் பகிர்ந்து கொள்ளும் வல்லமை, விரைவாகத் தீர்மானம் எடுக்கும் ஆற்றலும் சவால்களைக் கண்டு அஞ்சாதவராக புதிய மாற்றங்களை இலகுவாக உள்வாங்கிக் கொள்ளும் நவீன போக்கும் என்னை மிகவும் கவர்ந்தன. அவரை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

**திரு.சு.பரமானந்தம் பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி கோப்பாய்.**



### வாழ்த்துச் செய்தி

ஆசிரிய சேவையில் 40 ஆண்டுகளை அண்மித்த சேவையை பூர்த்தி செய்து பணியினை நிறைவு செய்து நிற்கின்ற வடமராட்சியின் மைந்தன் முருகேசு முரளிதரன் அவர் களின் சேவையினை நயந்து பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தந்தையின் தொழிலாகிய பொலிஸ் சேவைக்கு மகத்துவம் சேர்க்கும் வகையில் இவருடைய பணி கல்விப் புலத்தில் அமைந்திருந்தது.யாழ்ப்பாணத்தில் உள்ள 7 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் சிறந்த ஆசிரியராகவும் மாகாணத்திலுள்ள வளர்ந்து வரும் பாடசாலைகளில் சிறப்பாக சேவையாற்றிய அதிபர்களில் பணி நயந்து சொல்லக் கூடிய சிறப்பு மிக்க அதிபர்களில் ஒருவராகவும் இவர் கடமையாற்றியதைக் கண்டுள்ளோம். அவரது ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**திரு.தி.ஜோன் குயின்ரஸ் மேலதிக மாகாணக் கல்விப்**
**பணிப்பாளர் வடக்கு மாகாணம்.**



### ஆளுமையின் அடையாளம் அதிபர் முரளி


எல்லோருக்கும் சவாலாக விளங்கிய உயர்தர மாணவர் மன்றத்திற்கான பொறுப்பாசிரியர் பதவியைச் செவ்வனே மேற் கொண்டவர் முரளி.

உயர்தர மாணவருக்கு இந்து நாகரிக பாடத்தைப் போதிப்பதில் தனித்துவம்மிக்க ஆசிரியராகவும் முரளி விளங்கினார்.

பாடசாலைக்காக இரவு பகல் பாராது சேவையாற்றும் நற்பாங்கும் அவரிடம் வாய்த்தது. சோமஸ்கந்தாவின் பரிசளிப்பு விழாவையொட்டித் தயாராகும் சோமஸ்கந்தன் மலர் வெளியீட்டில் சேவை அடிப்படையில் திரு.வாகீசன் சேரின் வழிப்படுத்துதலில் நான் உட்பட ஆசிரியர்கள் சிலர் இணைந்து பணியாற்றினோம்.

இதில் முரளிசேர் கணனித் தட்டச்சுச் சார்ந்த பங்களிப்பை இரவு வேளைகளில் சஞ்சிகை வெளியீட்டிற்காக மேற்கொண்டார். அவரது ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**செந்தமிழ்ச் சொல்லருவி**
**திரு.ச.லலீசன் பிரதி முதல்வர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை**



### மனிதநேயம் நிறைந்த முரளி மாஸ்ரர்

உண்மை, நேர்மை,மனஉறுதி, அன்பு, பணிவு, ஒழுக்கம், தெளிவு, மற்றவர்களை மதித்து உதவுதல் போன்ற அத்தனைக்கும் சொந்தக்காரனான மனிதநேயமிக்க முரளி மாஸ்ரரின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

பிறர் குற்றங்களைப் பார்க்காது நல்ல குணங்களையே பார்க்கும் இவரை 2010 ஆம் ஆண்டு முதல் எனக்குத் தெரியும்.

எங்கள் நவமங்கை நிவாச செயலாளராக ஆரம்பம் முதல் இன்றுவரை சேவையாற்றிவரும் முரளி மாஸ்ரர் தன் கடமைகளைப் பிரியத்துடனும் மிக ஈடுபாட்டுனும், விசுவாசமாக செய்து வரும் பாங்கானது அவர் மேல் எனக்கு மேலும் மேலும் நம்பிக்கையை யும் மதிப்பினையும் வளர்த்தது.

அவரை எனக்கு ஓர் உண்மையான சகோதரன் எனலாம். அவரது ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**சுவர்ணா நவரட்ணம்**
**ஸ்தாபகர் நவமங்கை நிவாசம், கோப்பாய்.**

கம் யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சதுரக்கள்ளி

**Botanical Name-**
**Euphorbia antiquorum**
**Family-Euphorbiaceae**



கிராமத்தில் பொத்தைக்கள்ளி எனவும் குறிப்பிடுவர். வெப்பமான, வரட்சியான பகுதிகளில் வளரும். பால்ச்சத்து மிகுந்த மூலிகை. எந்தப்பகுதியை ஒடித்தாலும் பால் வரும். கெட்டியான பசை போன்ற பால். பால் தோலில், கண்களில் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சித்த மருத்துவத்தில் இரசமணி செய்வதற்கு இதன் செடியில் துளைத்து இரசமணி மருந்தை சதுரக்கள்ளி செடியின் பாலுடன்சேர்த்து அதனுள்வைத்து புடம் போட்டு மிகவும் வீரியமான இரசமணியை பெற்றுக்கொள்ளலாம்.

வரட்சியை தாங்கி வளரக் கூடியது சதுரக்கள்ளி. இதன் பழங்கள் றோஸ் நிறத்தில் இருக்கும். உள்ளே வெள்ளை நிற விதைகள் இருக்கும். பழத்தின் சதையை சாப்பிட்டு வர உடலிற்கு பலத்தை கொடுக்கக்கூடியதாகும். கட்டிகளை கரைக்கக்கூடியது. சில ஆய்வுகள் இதன் பழச்சதைக்கு எதிர் ஒட்சியேற்ற தன்மையுள்ளதாக எடுத்தியம்புகின்றன. பழங்கள் கிடைக்கும் பருவ காலங்களில் தினமும் சாப்பிட்டு வர வேண்டும்.

சதுரக்கள்ளி மூலிகை நெருப்புத்தணலில் வாட்டி சாறு எடுத்து, சாறின் அளவிற்கு தேங்காய் எண்ணெய் சேர்த்து காய்ச்சி பதத்தில் வடித்து வலி, பழைய நோ உள்ள இடங்களுக்கு பூசி வரலாம். அதேபோல் இதே எண்ணெய்யை சொறியாசிஸ் எனப் படும் தோல் வியாதிக்கும் வெளிப் பிரயோகமாக பூசி வரலாம்.

இந்த மூலிகையைக் கையாளும் போது மிகவும் கவனமாக கையாள வேண்டும். காரணம் இதிலிருக்கும் முட்களும் இதை ஒடித்தால் வரும் பாலும் ஆகும். ஏனெனில் பால் நேரடியாகப்பட்டால் நமைச்சலை ஏற்படுத்தக்கூடியதாகும். வைத்திய ஆலோசனையுடன் தான் இதைப் பயன்படுத்த வேண்டும்.

உடலில் ஏற்படும் புண்களையும் விசக்கடியினால் வரும் ஒவ்வாமை அல்லது நமைச்சல் தோலில் ஏற்பட்டாலும் ஆறாத குழிப்புண்களை ஆற்றும் தன்மையுடையது. சில புண்களில் கிருமித்தொற்று அதிகமாக இருக்கும் போது சதுரக்கள்ளி பால் 5,6 துளிகள் விட கிருமிகள் நீங்கி புண்கள் ஆறத் தொடங்கும்.

கணுக்காலில் வீக்கம், வலி ஏற்படும் போது சதுரக்கள்ளி இலையை வாட்டி சாறு எடுத்து பூசலாம். அதே போல இதனை கரும்படை தேமலுக்கும் பூசலாம். ஆமணக்கு எண்ணெய் 50 மில்லி, வேம்பம் எண்ணெய் 50 மில்லி, நல்லெண்ணெய் 50 மில்லி இதே நிறைக்கு சமஅளவு சதுரக்கள்ளியை வெட்டி மூன்றும் கலந்த எண்ணெய்யை வாணலியில் ஊற்றி, வெட்டிய சதுரக்கள்ளி துண்டுகளையும் போட்டு அடுப்பேற்றி அளவான தீயில் காய்ச்சி வரும் போது, பொன்நிறமாக கள்ளித் துண்டுகள் வந்ததும் வடிகட்டி, சேகரித்து வைத்துக்கொள்ளவும். இச்சதுரக்கள்ளி எண்ணெய்யை தயார் படுத்திக் கொள்ளலாம். இதனை வெளிப்புறமாக கட்டிகள், ஆறாத புண்கள், கரப்பான், சொறி, சொரியாசிஸ் போன்றவற்றுக்கும் பூசலாம். எண்ணெய் நன்றாக ஆறிய பின்பு தான் பூச வேண்டும். ஆனால் வலியுள்ள இடங்களுக்கு இவ்வெண்ணெய் இளம் சூடாக இருக்கும் போதும் ஒற்றடம் கொடுக்கலாம். இவ்வெண்ணெய்யை காய்ச்சும் போது எண்ணெய் தெறிக்காமல் பக்குவமாக காய்ச்ச வேண்டும். சேற்றுப்புண், சிரங்கிற்கும் பூசலாம்.

இதனுடைய தண்டுகளை வெட்டி தணலில் வாட்டி சாம்பலாக்கி, எலுமிச்சை இலைகளை இடித்துச் சேர்த்து ஒரு பருத்தித்துணியில் முடிந்து வலி, வீக்கம் உள்ள இடங்களில் சுடுநீர் ஆவியில் முடிந்த மூட்டையை பிடித்து ஒற்றடம் கொடுத்தால் வலி தணியும்., வீக்கத்தையும் கரைக்கக் கூடியது. பாறை நிறைந்த பகுதிகளிலும் வளரக்கூடியது. ஒரு வருடம் முழுவதும் மழை இல்லா விட்டாலும் செழிப்பாக வளரக்கூடியது.

இதனை வாட்டி சாறு எடுத்து அதனுடன் கறியுப்பு, வெண்கரம் சேர்த்து குழம்பு பதமாக அரைத்தும் மாறாத புண்களுக்கு பூசலாம்.

சதுரக்கள்ளி செடியை உலர்த்தி, எரித்து சாம்பலாக்கி தேங்காய் எண்ணெயில் குழப்பி புண்களுக்கு பூசலாம். சதுரக்கள்ளி மூலிகையை வைத்திய ஆலோசனையின்றி உட்பிரயோகமாக பயன்படுத்தக்கூடாது. உடலில் தோன்றும் பாலுண்ணிகளுக்கு (மருவு) சதுரக்கள்ளி பாலை ஈர்க்கினால் தொட்டு வைத்து வர கரைந்து போகும்.

சதுரக்கள்ளி பாலைத் தடவி அம்மூலிகையின் அடியில் உள்ள மண்ணை எடுத்து தூவி வர மூட்டு வலி, வீக்கம், பிடிப்பு ஆகியவை குணமாகும். (இவ்வாறு பயன்படுத்தும் போது தோலில் எரிச்சல் கண்டால் உடனே கழுவி விட்டு தேங்காய் எண்ணெய் தடவுக.)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இளம் கள்ளி தண்டினை தணலில் வாட்டி நகச்சுற்றுக்கு வைத்துக் கட்ட நகச்சுற்று தொடக்க நிலையாய் இருப்பின் அமுங்கி விடும். முதிர்ந்த நிலையாய் இருப்பின் பழுத்து உடைந்து ஆறும். சதுரக்கள்ளி பழமானது கிராமத்து ட்ராகன் பழம் என்று கூட சொல்லலாம். உஷ்ணத்தை அகற்றக்கூடியது. இதன் பழங் கள் ஆகும். அதாவது உடலின் வெப்பநிலையை சீர் படுத்தும். வியர்வையை அதிகரிக்க வைக்கக்கூடிய மூலிகை.

சதுரக்கள்ளியை வாட்டி இடித்து சாறு எடுத்து அதனுள் மிளகை ஊற வைத்து வெயிலில் நன்கு உலர்த்தி, நல்லெண்ணெய் விட்டு பத்து நாட்கள் வெயிலில் வைத்து வடித்து ஆற வைத்து தலைக்கு வைத்து வர பொடுகு, மண்டைக்கரப்பன் ஆறும்.

# மரவளமும் மனைவளமும் மனிதமதை புனிதப்படுத்தும்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

**(தொடர்ச்சி...)**

மரங்களில் பல்பயன்தரு மரங்களை நடுகைக்காக பயன்படுத்தலாம். உணவாக உட்கொள்ளக்கூடிய காய்கள் கனிகள், இலைகள் என்பனவற்றைத் தருவதோடு நிழல் தரவும் பறவைகள்,விலங்குகள் வந்தமர்ந்து தமது இன்னிசையை இசைப்பதற்கான வாய்ப்பினை வழங்கும் சூழலாகவும் இதனைக் கருதலாம்.

பூக்களில் தேனீயையும் கிளைகளில் அனைத்துப் பறவைகளையும் விலங்குகளைகும் ஒருமித்து காணும் பாக்கியம் ஆழ அகல விரிந்திருக்கும் விருட்சங்களில் தினமும் காணலாம்.

இந்த இரம்மியமான ஓசையும் ரீங்காரமும் பசுமையான காட்சியும் உண்ண உணவையும் தருகின்ற மரங்கள் ஒன்று சேர்ந்த வேளாண் காடுகளை மனைகளில் ஆரம்பித்து கிடைக்கின்ற இடங்களனைத்தும் நடுகை செய்து கிராமிய வனவளத்தை நாம் பெருக்கிக் கொள்ளுவோம்.

இதனையே சிவபுராணத்தில் மாணிக்க வாசகப் பெருமான் புல்லாகி பூடாகி என விளிக்கத் தொடங்கி இத்தாவர சங்கமத்தில் எனப் பாடி வைத்திருக்கின்றார்.

மரங்களின்றேல் நாம் இல்லை. எமக்கான வசதிகள் இல்லை. நாம் சுவாசிக்கும் காற்று இல்லை. அதனால் மரநடுகை மாதமான இக்காலத்தில் நாம் ஒரு மரத்தையாவது நட்டு வைப்போமே. மரம் செழித்தால்




மனை செழிக்கும் மனை செழித்தால், மனம் செழிக்கும்.

மனம் செழித்தால் மகிழ்ச்சி பொங்கும் மகிழ்ச்சி பொங்கினால் நாடு செழிக்கும்.

பொருளாதார சூறாவளியில் சிக்கி அனுதினமும் சுழன்று கொண்டிருக்கும் எமக்கு அவசியம் ஆறுதல் தேவைப்படுகின்றது. அந்த ஆறுதலை தருகின்ற பெறுமதி வாய்ந்த பொக்கிஷமாக மர வளத்தை நாம் கருதலாம்.

பல நிகழ்வுகளையும் பல கதைகளையும் கண்டும் கேட்டும் ஒன்றும் தெரியா

தைதப் போல் இருக்கும் மரங்களைப் பார்த்து நாம் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். மனதை வெறுமனே அலட்டிக் கொள்ளாமல் மனதுக்கு பிடித்தமான மரங்களை நடுகை செய்து அதிலிருந்து பல பயன்களை பெற வழிவகைகள் இருக்கும் போது நாம் மனவுளைச்சலுக்கான மருந்து தேடி மனிதத்தை தொலைத்து விட்டு அலைந்து கொள்கின்றோம்.

மமதை பிடித்து பேசித் திரிவதை தவிர்த்து மனிதத்தை பேணும் மனைகளில் வாழும் நமது உறவுகளுக்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

காக மரநடுகையை ஒன்றிணைந்து செய்து அதன் பயனை நமது வாழ்நாளிலும் பின்னர் எமது சந்ததிகளுக்கும் விட்டுச் செல்வோம்.

ஒருவரின் வாழ்க்கைக் காலத்தில் செய்பிறவிப் பயனிலொன்று ஒரு மரமாவது நடுகை செய்வது ஆகும். மரத்தின் கீழ் அமர்ந்திருந்ததாலேயே ஐசாக் நியூட்டனுக்கு புவியீர்ப்பு விசை தட்டுப்பட்டது.

அதேபோல மரத்தினுள் பல புதுமைகள் புத்தாக்கங்கள் உள்ளார்ந்து இருக்கின்றன. இளைய சந்ததியை இவ்வாறான மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களுக்குள் உள்வாங்கி மரத்தின் முக்கியத்துவத்தை உரத்து ஒலிப்போம்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


நாமும் மற்றையவர்களும் வாழ்வதற்கான ரம்மியமான சூழலை உருவாக்கும் பொறுப்பு நம் அனைவரினதும் கைகளில் தங்கியிருக்கின்றது. மண்ணைத் தொட்டவன் மகிழ்வுற மனம் மகிழ்வுறும் மரம் வளர்க்கும் புனிதச் செயலை செய்வோமே.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 109

# காசா பணமா காது கொடுத்துத்தான் கேட்போமே



ஒரு மனநல மருத்துவருக்கு பெண்மணி ஒருவர் தொலைபேசியில் அழைப்பு ஏற்படுத்தி தான் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகச் சொல்லி அழுதாள். பதறிப்போன மருத்துவர் 'அழாதீர்கள்... ஏன் தற்கொலை செய்துகொள்ளப் போகிறீர்கள்' என கேட்க, அந்தப் பெண்மணி காரணங்களைச் சொல்கிறாள்.

'எதுவானாலும் நாளை முடிவெடுக்கலாம். இப்போது தூங்குங்கள்' எனச் சொல்லி சமாதானப்படுத்துகிறார் மருத்துவர்.

அடுத்த நாள் மருத்துவர் அந்தப் பெண்மணிக்குப் போன் செய்து நலம் விசாரிக்கும்போது 'தற்கொலை எண்ணத்தில் இருந்து வெளியே வந்துவிட்டேன் என்று அந்தப் பெண்மணி சொல்ல மருத்துவருக்கோ ஆச்சரியம். நான் சொன்ன எந்த விடயம் உங்கள் மனதை மாற்றியது எனக் கேட்டார்.

நீங்கள் சொன்ன எதுவுமே எனக்கு ஆறுதலாக இல்லை.... இதுவரை நான் சொல்வதை ஐந்து நிமிடம் கூட யாரும் காதுகொடுத்துக் கேட்டதே இல்லை. நீங்கள் தான் நான் சொல்வதை பொறுமையாகக் கேட்டீர்கள். அதனால் தான் என் மனம் மாறியது' என்றார் அந்தப் பெண்மணி.

இன்று பலரது பிரச்சினைகளின் தீவிரத்துக்கு மிக முக்கிய காரணம் அவர்கள் புலம்பித்தள்ள நம்பகமான மனிதர்கள் இல்லாமையே.

கடவுளிடம் நாம் மனதார பிரார்த்தனை செய்துகொள்வதன் பின்னணியிலும் ஓர் உளவியல் உள்ளது. எடுத்துக்காட்டாக கண்ணனின் பக்தர்கள் அனைவரும் தங்கள் பிரச்சினைகளை கண்ணனிடம் மனதாரச் சொல்லி தீர்வு கிடைக்கப்பெற்று வந்தார்கள். 'நீ சிரிப்பதைத் தவிர எதுவுமே சொல்வதில்லை. எல்லோருக்கும் எப்படி தீர்வு கிடைக்கிறது?' என்று பிரம்மன் ஆச்சரியமாகக் கேட்கிறார்.

அப்போது கண்ணன் பிரம்மனை பூலோகத்துக்கு அழைத்துச் செல்கிறார்.

எல்லா வசதியும் இருந்தும் மன நிம்மதி இல்லாத ஒருவனிடம் கண்ணன், 'உங்களுக்கு என்ன பிரச்சினை?' என்று கேட்கிறார்.

அவன் மடைதிறந்த வெள்ளம் போல் தன் குழப்பங்களைக் கொட்டித் தீர்த்தான்.

கண்ணன் அமைதியாக கேட்டு கொண்டிருந்தார். அந்தக் குழப்பவாதியே தன் பிரச்சினைகளுக்குத் தான் செய்ய போகும் தீர்வுகளைப் பற்றியும், சாதக பாதங்களையும் தெள்ளத்தெளிவாக விளக்கினான்.

அவன் சொல்லி முடித்ததும் அவனது மனதில் தெளிவு பிறந்தது. மகிழ்ச்சியாக விடைபெற்றான்.

இப்போது கண்ணன், 'பார்த்தீர்களா பிரம்மா, அவன் புத்திசாலி. அவன் பிரச்சினையை அவனே தீர்த்துக் கொள்ளும் அளவுக்கு தீர்வுகளையும் சாதக பாதகங்களையும் தெரிந்தும் வைத்திருந்தான்.

அதை செயற்படுத்தும் போது தடுமாற்றம் உண்டாகுமோ என்ற கவலையாலேயே அவன் குழப்பத்தில் இருந்தான். நான் அவன் சொல்வதை பொறுமையாக காதுகொடுத்து கேட்டேன். தீர்வை அவனே கண்டுகொண்டான்' என்றார்.

ஆகவே, பிரச்சினைகளை நம்மிடம் சொல்வோருக்குத் தேவை அறிவுரையோ ஆறுதலோ அல்ல. அவர்கள் சொல்வதை பொறுமையாகக் கேட்க உதவும் நம் காதுகளே.

# மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

(வவுனியா)



வவுனியா, புளியங்குளம், பரசங்குளம் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் காட்டு யானை உயிரிழந்துள்ளது.

எட்டடி உயரம் கொண்ட குறித்த யானை விவசாய நிலத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார கேபிளில் அகப்பட்டு நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பில் வவுனியா, புளியங் குளம், பரசங்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக வன விலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் வவுனியா வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-299)

# சங்கிலிய மன்னனின் குடும்பப்படம்
## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னனான சங்கிலிய மன்னனின் குடும்பப் படம் திரை நீக்கம் செய்யும் நிகழ்வு நேற்று யாழ்.கல்வியியற் கல்லூரியின் பீடதிபதி சு.பரமானந்தம் தலைமையில் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இதற்கு முன்னர் வீர சங்கிலியன் மன்னன் விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்ட அதேவேளை கல்லூரியின் நுழைவாயிலில் தனிக்கருங்கல்லால் ஆன 13.5 அடி சங்கிலியன் உருவச் சிலையும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கல்லூரி தமிழ் மன்றத்தால் ஆண்டுதோறும் "வீரசங்கிலி" ஆண்டுமலர் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-104)

# கண்ணிவெடி அகற்றும் பணி துரிதகதியில் முன்னெடுப்பு



(கண்டாவளை)

வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஈடுபடும் ஸார்ப் தன்னர்வ தொண்டு நிறுவனமானது கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் 34 ஆயிரத்து 649 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள சுதந்திரபுரம், மல்லிகைத்தீவு ஆகிய பகுதியிலும் அம்பகாமம் பகுதியிலும் துரிதகதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-315)

## புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

எங்கட புத்தகங்கள் கண்காட்சி எதிர்வரும் 6 ஆம் திகதி மற்றும் 7 ஆம் திகதிகளில் பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த கண்காட்சியில் ஈழத்து எழுத்தாளர்களின் ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

'மாணவர்கள் ,ஆசிரியர்களுக்கு பயன்படக் கூடிய வகையில் குறித்த புத்தகக் கண்காட்சி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. (நி-6)



யா/சங்கரத்தை வித்தியாசாலையின் புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தொகுதி திறப்பு விழா வைபவமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. (படம்- சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 39







"உன்னைவிடப் பெரிய விருந் தாளி எனக்கு யாரும் இல்லை!.." என்று கூறிய கந்தன் மாறவேள் சட்டென்று நிறுத்திக் கொண்டான். "வந்தவர்கள் பெரிய விருந்தாளிகள் தான். ஆனால் அவர்களைக் கவ னித்துக்கொள்ள என் தந்தை இருக் கிறார்; அரண்மனை அதிகாரி களும் இருக்கிறார்கள்.

உன்னோடு நேற்று ராத்திரிகூட நான் அதிக நேரம் பேசவில்லை. வழி நடையிலாவது சிறிது நேரம் உன்னோடு சல்லாபம் செய்தால் தான் என் மனம் நிம்மதி அடை யும். அவசியம் கொள்ளிடக்கரை வரையில் வந்தே தீருவேன்!" என்றான். "எனக்கு ஆட்சேபம் ஒன்று மில்லை. உன் இஷ்டம், உன் சௌக ரியம்" என்றான் வந்தியத்தேவன்.

ஒரு நாழிகை நேரத்துக்குப் பிறகு இரு நண்பர்களும் இரு குதிரை களில் ஏறிச் சம்புவரையர் மாளி கையிலிருந்து புறப்பட்டுச் சென் றார்கள். குதிரைகள் மெதுவாகவே சென்றன. பிரயாணம் மிகவும் இன்பகரமாயிருந்தது. மேலக்காற்று சாலைப் புழுதியை வாரி அடிக்கடி அவர்கள் மேல் இறைத்ததைக் கூட அந்த நண்பர்கள் பொருட்படுத்த வில்லை. பழைய ஞாபகங்களைப் பற்றிய பேச்சில் அவ்வளவாக மனத் தைப் பறிகொடுத்திருந்தார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வந்தி யத்தேவன் கூறினான்; "கந்தமாறா! உன் வீட்டில் ஒரே ஒரு இரவுதான் தங் கினாலும் அது எனக்கு எவ்வளவோ பயனுள்ளதாயிருந்தது. ஆனால் ஒரே ஒரு ஏமாற்றம். உன் சகோதரி யைப் பற்றி வடபெண்ணை நதிக்கரை யில் என்னவெல்லாமோ வர்ணனை செய்து கொண்டிருந்தாய்! அவளை நன்றாய்ப் பார்க்கக் கூட முடியவில்லை.

உன் அன்னைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு அவள் எட்டிப் பார்த்தபோது அவள் முகத்தில் எட்டில் ஒரு பங்கு தான் தெரிந்தது! நாண மும் மடமும் பெண்களுக்கு இருக்க வேண்டியதைவிட உன் தங்கை யிடம் சற்று அதிகமாகவேயிருக் கிறது."

கந்தமாறனுடைய வாயும் உதடு களும் ஏதோ சொல்வதற்குத் துடித் தன. ஆனால் வார்த்தை ஒன்றும் உருவாகி வரவில்லை. "ஆயினும் பாதகமில்லை. நீதான் நான் திரும்பி வரும்போது சில நாள் உன் வீட்டில் தங்க வேண்டும் என்று சொல்கி றாயே? அப்போது பார்த்துப் பேசிக் கொண்டால் போகிறது. அதற்குள் உன் தங்கையின் கூச்சமும் கொஞ் சம் நீங்கிவிடலாம் அல்லவா? கந்தமாறா! உன் சகோதரியின் பெயர் என்னவென்று சொன்னாய்?"

"மணிமேகலை!"

"அடடா! என்ன இனிமையான பெயர்! பெயரைப் போலவே அழகும் குணமும் இருந்து விட்டால்.."

கந்தமாறன் குறுக்கிட்டு, "நண்பா! உன்னை ஒன்று வேண்டிக் கேட் டுக்கொள்கிறேன். என் தங்கையை நீ மறந்து விடு; அவளைப் பற்றி நான் சொன்னதையெல்லாம் மறந்துவிடு; அவள் பேச்சையே எடுக்காதே!" என்றான்.

"இது என்ன, கந்தமாறா! ஒரே தலைகீழ் மாறுதலாயிருக்கிறதே! நேற்று இரவு கூட உன் வீட்டுக்கு நான் மருமகனாக வரப் போவ தைப் பற்றி ஜாடையாகச் சொன் னாயே!"

"அவ்விதம் நான் சொன்னது உண்மை தான். ஆனால் பிறகு வேறு நிலைமை ஏற்பட்டுவிட்டது. என் பெற்றோர்கள் வேறு இடத்தில் என் சகோதரியைக் கலியாணம் செய்து கொடுக்க முடிவு செய்து விட்டார்கள்; மணிமேகலையும் அதற்குச் சம்மதித்து விட்டாள்!"

வந்தியத்தேவன் மனத்திற்குள் "மணிமேகலை வாழ்க!" என்று சொல்லிக் கொண்டான். மணிமேக லையை யாருக்குக் கொடுக்க நிச்சயித் திருப்பார்கள் என்று ஊகிப்பதிலும் அவனுக்குக் கஷ்டம் ஏற்படவில்லை.

மூடு பல்லக்கிலிருந்து வெளிப் பட்ட இளவரசர் மதுராந்தகருக் குத்தான் நிச்சயித்திருப்பார்கள். மதுராந்தகருடைய கட்சிக்குப் பலம் தேட இப்படியெல்லாம் உறவுகளை யும் ஏற்படுத்துகிறார்களாக்கும். பழுவேட்டரையர் பொல்லாத கெட்டி க்காரர் தான்!

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## நாட்டு நலன் எதில்?


என் பணத்தால் அயல் நாட்டு மனிதர் ஒரு வர் பெயரும் புகழும் அடைவதை நான் விரும்பவில்லை. என் பணத்தை என் நாட் டைச் சேர்ந்த ஒருவ ருக்குக் கொடுத் தாலே எனக்குத் திரு ப்தி ஏற்படும் என் றது.

அப்போது ஒரு ஏழை பிராமணன் வந்து தேவசர்மாவி டம் "ஐயா! நீங்கள் அயல்நாட்டவர் என்று தெரிகிறது. அத னால் தான் வாய்வி ட்டு தைரியமாகக் கேட்கிறேன். என் வீடு இடிந்து விழும் நிலையில் உள்ளது. என் தாய் கடும் நோயில் படுத்த படுக்கையா கக் கிடக்கிறாள். என் தேவைகளோ பல. ஆனால் எல்லாவற் றையும் நீங்கள் தீர்த்து வைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாதுதான். உங்களால் முடிந்த உதவியை எனக் குச் செய்யுங்கள்.

இவ்வூரில் நாற்பது ஆண்டுகளாக நான் இருந்து வந்த போதி லும் எனக்கு உதவி செய்பவர் யாருமே இல்லை. இந்த நாட் டில் உள்ளவர்கள் எல் லோரும் சுயநலவாதி கள்" என்றுகூறித் தன் வெறுப்பை வெளிப்ப டுத்தினான்.

தேவசர்மா அந்த பிராமணருக்கு ஒரு வராகனைக் கொடு த்து "உன் தேவைக ளைப் பூர்த்தி செய்யா தவர்களை நீ சுயநல வாதிகள் என்று கூறு வது நல்லதல்ல. அயல் நாட்டவரிடம் உன் நாட்டவரைப்பற்றி இழி வாக நீ கூறினால் அது உன்னை நீயே தாழ்த் திக் கொள்வது போலா கும். இந்த இரண்டு விடயங்களை நீ நினை வில் கொண்டால் உன் கஷ்டங்கள் எல்லாம் மறைந்து போய் விடும்" என்று அறிவுரை கூறி அனுப்பினார்.

அவர் பிசாசிடம் அந்த ஏழை பிராமண னுக்குப் பணம் கொடு த்து உதவலாமே எனக் கூறிவே பிசாசும் "அவ னுக்குப் பணம் என் னவோ தேவைப்படு கிறதுதான். ஆனால் நான் ஏன் என் பண த்தை இந்த ஊர்க்கார னுக்குக் கொடுக்க வேண்டும்? என் ஊரி லுள்ளவன் எவனுக்கா வது கொடுத்தாலே என் மனம் திருப்தி



அடையும்" என்றது.

சற்று இளைப்பா றிய பின் தேவசர்மா பிசாசுடன் அதன் ஊருக் குக் கிளம்பினார். வழி யில் அவர் ஒரு அரசா ங்க வீரனைக் கண்டார். அவன் மிகவும் சிரம திசையில் இருப்பது தெரிந்து. அவன் பிசா சின் ஊர்க்காரன்தான். அவனுக்குப் பணம் கொடுக்கலாமே என்று அவர் பிசாசிடம் கூறி னார். பிசாசோ " என் ஊர்க்காரன் தான் என் றாலும் என் தெருவில் வசிப்பவனாக இருப்ப வனுக்குக் கொடுத்தால் எனக்குத் திருப்தியாக இருக்கம்" என்றது. அப்போது தேவ சர்மா வுக்குப் பிசாசு தன் வீட்டிலுள்ள ஒருவனு க்கே பணம் கொடு க்க விரும்புகிறது என் பது புரிந்தது. எனவே அவர் "உன் தெருவில் வசிப்பவனை விட உன் வீட்டுக்காரன் ஒருவ னுக்கு உன் பணத்தைக் கொடுத்து விடலாம். எனவே உன் வீட்டி ற்கே போகலாம்" என் றார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
>
> - அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஏழை மக்களிடம் பணம் பறிக்கின்ற ஈனர்களை என் செய்வது

நடுச்சாமம் அனைவரும் உறக்கத்திலிருந்த வேளை. வசதி படைத்த வீடொன்றுக்குள் திருடன் ஒருவன் நுழைந்து விடுகிறான்.

கும்பென்ற இருட்டில் அவனின் கை சுவருடன் அடிபட, அவன் கைவிரல் நகம் உடைந்து விழுகிறது.

திருட வந்தவன் விழுந்த தன் நகத்தைத் தேடி எடுப்பதற்காக தன் கையால் வீட்டு நிலத்தை தடவுகிறான்.

அந்நேரம் அங்கு கிடந்த ஒரு பொருளில் அவன் கைபட்டுவிட, அதிலிருந்து எழுந்த சத்தம் உறக்கத்தில் இருந்தவர்களை விழிக்க வைத்தது.

திருடன் நுழைந்திருப்பதை உணர்ந்த வீட்டு எஜமான் மின்குமிழை ஒளிரவிட, திருடன் அகப்பட்டுக் கொள்கிறான்.

அது சரி திருட வந்த நீ எதை நிலத்தில் தேடுகிறாய் என வீட்டு எஜமான் கேட்கிறார்.

அதற்கு அந்தத் திருடனோ ஐயா! உங்கள் வீட்டில் திருடவந்தபோது சுவரில் கை அடிபட்டு என் விரல் நகம் உடைந்து விழுந்து விட்டது.

விழுந்த நகத்தைத் தேடி எடுத்துவிட வேண்டும் என்று முயற்சித்தேன் என்றான்.

அது சரி. திருட வந்த நீ பணத்தை – நகையைத் திருடிச் செல்லாமல், எதற்காக விழுந்த நகத்தை தேடினாய் எனக் கேட்கிறார் வீட்டு எஜமான்.

அதற்கு அந்தத் திருடனோ ஐயா! வீட்டுக்குள் நகம் கிடந்தால் அது நீங்காத் தரித்திரம்.

நான் திருடனாயினும் நீங்கள் நல்லா இருந்தால்தானே எனக்கும் ஏதேனும் கிடைக்கும் என்றான்.

திருடனின் இந்தப் பதில் கண்டு வீட்டு உரிமையாளர் வியந்து போனார்.

திருடனிடம் சுவதர்மம் இருப்பதை நினைந்து நெகிழ்ந்த அவர், திருடனுக்கு நிறைந்த உதவிகளைச் செய்தார் என்பது கதை.

ஆம், திருடனாக இருந்தாலும் அவனிடம் தர்மம் இருக்க வேண்டும்.

ஆனால் இப்போது ஒரு ஈனக் கும்பல் ஒன்று நம் மண்ணில் உருவாகியுள்ளது.

மிகவும் வறிய மக்களுடன் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி; ஏழைக் குடும்பங்களுக்கு உதவுவது தங்களின் பணியென்றும் உங்களுக்கு ஐந்து பத்து இலட்சம் ரூபாயை அனுப்பி உதவி செய்யவுள்ளோம் என்றும் கூறி, அந்த மக்களை நம்பவைத்து, அந்த இலட்சங்களை அனுப்புவதற்கு ஏற்பாடாக பத்து பதினைந்தாயிரம் ரூபாய்களை உடனடியாகத் தங்களின் வங்கிக் கணக்குக்கு அனுப்புமாறும் தாமதிக்க வேண்டாம் என்றும் கூறி, அந்த ஏழை மக்களிடம் பணம் பறிக்கின்ற ஈனப் பிறவிகள் இந்த மண்ணில் இருக்கின்றனர் எனும்போது இதைவிட் கொடுமை வேறு என்னதான் இருக்க முடியும்.

அன்புக்குரியவர்களே! ஏமாறுகின்றவர்கள் இருக்கும்வரை ஈனர்களின் ஏமாற்றுச் செயலும் இருக்கவே செய்யும்.

ஆகையால் எதிலும் விழிப்பாக இருப்பது தான் ஒரே வழி.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு சிங்கள மக்களே நீதி வழங்க வேண்டும்

## சபையில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

இலங்கையில் இனப் படுகொலை இடம்பெறவில்லை எனவும் யாரும் படையினரிடம் கையளிக்கப்படவில்லை எனவும் காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர் கருத்துக்களை வெளியிட்டுள்ளதாகவும் இவர்கள் போன்ற நீதிக்கு அப்பாற்பட்டவர்களை நீக்கிவிட்டு, நீதியான தலைவர்களை நியமிக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதியை வழங்குவதற்கு தயாராகுமாறு சிங்கள மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், உண்மையான பௌத்த மதத்தை நேசிக்கின்ற, புத்த பகவானை வணங்குகின்ற நீதியான சிங்களத் தலைவர்கள் இருக்கின்றார்கள்.

சிங்கள அதிகாரிகள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு நியமனம் கொடுங்கள். மனச்சாட்சியின் படி இருக்கும் இவ்வாறானவர்களை நியமித்து இந்த நாட்டை எவ்வாறு கொண்டு செல்வது என்பது பற்றி சிந்தியுங்கள்.

அது தான் நீங்கள் செய்யக்கூடிய மிகப் பெரிய காரியமாக மாறும் என அரசாங்கத்திற்கு வலியுறுத்தியுள்ளார். (ம)

# காதலனை வீட்டார் திட்டியதால் விபரீத முடிவெடுத்தவர் மரணம்

## திருகோணமலையில் சம்பவம்

(திருகோணமலை)

தான் காதலித்து வந்த நபரை வீட்டார் திட்டியதன் காரணமாக, 18 வயது யுவதி தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று திருகோணமலையில் பதிவாகியுள்ளது.

திருகோணமலை உப்புவெளி காவல்துறை பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காதலித்து வந்த இளைஞன் சரியில்லை என தாயார் தனது மகளுக்கு அறிவுரை கூறியதையடுத்து இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த யுவதி அலத்தோட்டம் - ஆனந்த விநாயகர் வீதியில் வசித்து வரும் 18 வயதுடைய சிவக்குமார் கீர்த்தனா எனவும் தெரியவந்துள்ளது.

தூக்கில் தொங்கிய நிலையில் கிடந்த யுவதியை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார். (ம)

## யாழில் விபத்தினை ஏற்படுத்திவிட்டு

# தப்பிச்செல்ல முற்பட்ட இரண்டு

## பொலிஸார் மக்களால் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் விபத்தினை ஏற்படுத்திவிட்டு தப்பி செல்ல முற்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்களை ஊரவர்கள் மடக்கிப்பிடித்து, யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களில் ஒருவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் எனவும் மற்றையவர் முல்லைத்தீவு ஐயன்குளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் முலவைச் சந்திக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மது போதையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் நிலைதடுமாறி எதிரே வந்த வான் ஒன்றுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அதில் வான் சிறிய சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

விபத்துக்கு உள்ளான இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் வான்சாரதியுடன் தம்மை பொலிஸார் என கூறி முரண்பட்டதுடன், அங்கிருந்து தப்பிசெல்ல முற்பட்டனர்.

அதனை அவதானித்தவர்கள் இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் மடக்கி பிடித்து, யாழ்ப்பாண பொலிஸாரிடம் கையளித்ததை அடுத்து இருவரையும் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை கொழும்புத்துறை மணியந்தோட்டம், உதயபுரம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கனகராயன்குளம் ஆலங்குளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவ முகாம், குறிசுட்டான்குளம், பரசங்குளம், புதூர் கோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதூர் கிராமம், புதுவிளாங்குளம், சிவன் கோவில், விக்னகுளம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** முள்ளிக்குளம் கடற்படை முகாம், முள்ளிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022**

"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் [illegible]"

[illegible] ஸ்டேர்லிங் மோர்டன் (அமெரிக்க அரசியலாளர்)

# உயர்தர பரீட்சைக்குத் தோற்ற 80 வீத வருகை கட்டாயம்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு 80 வீதபாடசாலைவருகை பதிவு அவசியமானது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு 80வீத பாடசாலை வருகைப் பதிவு அவசியமில்லை என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், அடுத்த வருடம் முதல் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு 80வீத பாடசாலை வருகைப் பதிவு அவசியமானது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய் நிர்ணயமும் அறிகுறிகளும் அதன் தாக்கங்களும்

மழை வீழ்ச்சியின் அதிகரிப்புடன் டெங்கு நோயின் பரவலும் அதன் தாக்கங்களும் நமது பிரதேசத்தில் அதிகரிக்கத் தொடங்கி விட்டன. இதனை மருத்துவமனைகளில் அதிகரித்து வரும் டெங்கு நேயாளிகளின் எண்ணிக்கை எடுத்துக் காட்டுகிறது.

மழை நீர் தேங்கி யுள்ள பகுதிகளில் அதிகளவு பெருக்க மடையும் ஈடீஸ் எனும் நுளம்பு வகை காரணமாகவே டெங்கு வைரஸ் ஒருவ ரில் இருந்து மற்றொருவருக்கு பரவல டைகின்றது. டெங்கு நோயின் பரவலை யும் அதன் தாக்கங்களையும் கட்டுப்படுத் துவதில் நாம் இன்னும் முழுமையான வெற்றியைப் பெறவில்லை என்பது மிகவும் கவலையை அளிக்கின்றது.

ஈடீஸ் நுளம்பானது டெங்கு நோயுள்ள ஒருவரில் குருதியை உறிஞ்சி விட்டு மற்றொருவரில் குருதியை உட்கொள்ளும் போது டெங்கு வைரசினை அவரது உடலினுள் செலுத்துகின்றது. டெங்கு வைரஸ் குருதியில் பிரிகையடைந்து டெங்குக் காய்ச்சலை ஏற்படுத்துகின்றது. இந்த நுளம்பானது 200M வரை பறக்கும் ஆற்றலுடையதானால் ஒரு வீட்டிலிருந்து அயலில் உள்ள வீடுகளுக்கும் டெங்கு நோயைப் பரப்புகின்றது. இதனாலேயே டெங்கு நோய்ப் பரவல் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வேகமாகப் பரவுகின்றது. டெங்குக் காய்ச்சீல் 4 வகை டெங்கு வைரசுக்களினால் பரவுகின்றது. ஒரு வகை டெங்கு வைரஸினால் பாதிக்கப்பட்ட ஒருவர் அதற்கான நோயெதிர்ப்பு சக்தியை ஆயுட்காலம் வரை பெற்றுக்கொள்வார். ஆயினும் அவருக்கு மற்றைய வகை டெங்கு வைரஸினால் மீண்டும் டெங்குத்தொற்று ஏற்படலாம். டெங்கு வைரஸ் தொற்று ஏற்பட்ட ஒருவருக்கு இவ் வைரசினால் பலவிதமான தாக்கங்கள் ஏற்படலாம். இதனை கீழ் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தலாம்.

வேறுபடுத்தப்படாத காய்ச்சல், சாதாரண டெங்குக் காய்ச்சல், டெங்குக் குருதிப் பெருக்குக் காய்ச்சல்.

**வேறுபடுத்தப்படாத காய்ச்சல்**

இவ்வகைக் காய்ச்சலுக்கு உட்படுவர்களிற்கு காய்ச்சலுடன் தலைவலி, உடல் வலி, இடுப்புவலி போன்ற அசாதாரண நிலை காணப்படும். சிலருக்கு காய்ச்சல் கூட ஏற்படாது. இவ்வகை அசாதாரண நிலை பொதுவாக ஓரிரு நாட்களில் முற்றாக குணமடையும்.

**சாதாரண டெங்குக் காய்ச்சல்**

இக் காய்ச்சலின் போது காய்ச்சலுடன் பின்வரும் அறிகுறிகள் காணப்படும்.

**டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள்**


கடுமையான தலைவலி, கண்களுக்குப் பின்னான வலி, தசை வலி, இடுப்பு வலி, மூட்டு வலி, உடலில் சிவப்புப் புள்ளிகள் தோன்றுதல், வாந்தி சாதாரண டெங்குக் காய்ச்சலை இரு கட்டங்களாகப் பிரிக்கலாம். காய்ச்சல் நிலை, மீள் நிலை.

**காய்ச்சல் நிலை:** பொதுவாக 3-5 நாட்கள் நீடிக்கலாம். இதன்போது சில சமயங்களில் சமிபாட்டுத் தொகுதியிலிருந்து குருதிப்போக்கு, அதிக மாதவிடாய் வெளியேற்றம் காணப்படலாம்.

**மீள்நிலை:** இதன்போது மேற்கூறிய அறிகுறிகளிலிருந்து முன்னேற்றம் காணப்படும். உடற்சோர்வு குறைவடையும். பசியில் முன்னேற்றம் காணப்படும்.

**டெங்குக் குருதிப் பெருக்குக் காய்ச்சல்**

ஆரம்ப நிலையில் இவ்வகைக் காய்ச்சல் சாதாரண டெங்குக் காய்ச்சல் போல காணப்படும். ஆயினும் சில நாட்களின் பின்னர் குருதிக்கலன்களில் ஏற்படும் தாக்கங்களினால் குருதித்திரவம் வெளியேறி அபாய நிலையைத் தோற்றுவிக்கின்றது. டெங்குக் குருதிப் பெருக்குக் காய்ச்சலினை பின்வரும் மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம்.



காய்ச்சல் நிலை, கடுமையான நிலை, மீள் நிலை.

**காய்ச்சல் நிலை**

இதன்போது பொதுவாக நோயாளி ஒருவருக்கு டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள் காணப்படும். இவ்வறிகுறிகளுடன் பின்வரும் அபாயநிலை அறிகுறிகள் காணப்படுமிடத்து நோயாளி கடுமையான நிலைக்குள்ளாகின்றார்.

**அபாய நிலைக்கான அறிகுறிகள்**

பசியின்மை, வயிற்று வலி, தீவிர உடற்சோர்வு, தொடர்ச்சியான வாந்தி, முரசிலிருந்து குருதி வெளியேறுதல், சிறுநீரின் அளவு குறைவடைதல், உடல் வீக்கம்.

**கடுமையான நிலை**

டெங்குக் காய்ச்சலின் போது குருதிக் கலன்களில் ஏற்படும் தாக்கங்களினால் குருதி இழையம் வெளியேறுவதுடன் குருதிச்சிறுதட்டும் குறைவடையும். இதனால் அதிக குருதிப்போக்கு ஏற்படலாம். இந்த நிலை மேலும் தீவிரமடையும் போது நோயாளிக்கு அதிர்ச்சி ஏற்படவும் வாய்ப்புண்டு. எனவே டெங்குக் காய்ச்சல் ஏற்படும் ஒருவர் கடுமையான நிலைக்குச் செல்வதற்கான அறிகுறிகள் (அபாய நிலை அறிகுறிகள்) ஏற்படுகின்றதா? என்பதை மிக அவதானமாகக் கண்காணிக்க வேண்டும்.

பொதுவாக டெங்குக் காய்ச்சலின் போது, கர்ப்பிணித்தாய்மார்கள், வயது முதிர்ந்தவர்கள், சிறுவர்கள், உடற் பருமன் கூடியவர்கள், ஈரல், சிறுநீரகம், இருதய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே டெங்கு நோய்த்தொற்று ஏற்பட்ட ஒருவருக்கு மேற்கூறப்பட்ட எந்தவொரு அபாயநிலை அறிகுறிகள் ஏற்படுமிடத்து உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறப்பட வேண்டும். தேவை ஏற்படின் மருத்துவ ஆலோசனையின் படி நோயாளி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட வேண்டும். கடுமையான காய்ச்சல் நிலை பொதுவாக 48 மணித்தியாலங்களுக்கு நீடிக்கலாம். கடுமையான நிலையின் போது பொதுவாக காய்ச்சல் குறைவடைந்து விடும். எனவே காய்ச்சல் குறைவடைந்தவுடன் டெங்கு நோயின் தாக்கங்கள் யாவும் குணமடைந்து விட்டன என அவதானமற்று இருக்க முடியாது.

**மீள் நிலை**

கடுமையான நிலையின் பின்னர் டெங்கு நோயின் அறிகுறிகள் படிப்படியாக முன்னேற்றமடையும். ஊடற்சோர்வு,பசி என்பவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டு மீண்டும் நோய்க்கு முன்னைய உடல் நிலையை அடைவர்.

**டெங்கு நோயாளர்களுக்கான அறிவுரைகள்**

உங்களுக்கு டெங்குக் காய்ச்சலுக்குரிய அறிகுறிகளுடன் காய்ச்சல் ஏற்பட்டு 2-3 நாட்களில் குணமடையவில்லையாயின் மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும். காய்ச்சல் காலங்களின் போது நோயாளி ஒருவருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள நீராகாரமும் ஓய்வும் அவசியம். 50 Kg நிறையுடைய ஒருவர் 2-2.5 லீற்றர் திரவ ஆகாரத்தை 24 மணி நேரத்திற்கு உள்ளெடுக்க வேண்டும் கஞ்சி,நெல்லுப்பொரி நீர், பால், தேநீர், பழச்சாறு ஆகியவற்றை உள்ளெடுக்கலாம். மணித்தியாலத்திற்கு 100ml அருந்துவதன் மூலம் பரிந்துரைக்கப்பட்ட அளவை உள்ளெடுக்க முடியும்.

நோயாளி வயிற்றுக் குமட்டல், வாந்தி காரணமாக பரிந்துரைக்கப்பட்ட நீராகாரத்தை உள்ளெடுக்க முடியாவிடின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சேலைன் வழங்கப்பட வேண்டிய நிலை ஏற்படும். உடலுக்குத் தேவையான திரவத்தைப் பெற்றுக் கொள்கின்றோமா என்பதை வெளியேறும் சிறுநீரின் அளவைக் கொண்டு அறிந்து கொள்ள முடியும். எனவே வெளியேறும் சிறுநீரின் அளவை 3-4 மணி நேரத்திற்கு ஒரு முறை அளவிட வேண்டும். 100-120ml சிறுநீர் வெளியேற்றம் காணப்பட வேண்டும். காய்ச்சலின் போது 1g பனடோல் (2 குளிகைகள்) வில்லைகளை உள்ளெடுக்கலாம். காய்ச்சல் நேரங்களில் மட்டும் பனடோல் வில்லைகளை 6-8 மணி நேரத்திற்கு ஒருமுறை உள்ளெடுக்கலாம். Aspirin, Brufen, Voltaren, clopidorgel போன்ற நோவுக்குரிய மருந்துகளைத் தவிர்க்க வேண்டும்.

டெங்குக் காய்ச்சல் வைரசினால் ஏற்படுவதனால் இதற்கு அன்டி பயோடிக் மருந்துகளினால் எவ்வித நன்மையும் ஏற்படாது. குறிப்பாக சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்களுக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்படும் பட்சத்தில் மிகவும் கவனமாக பராமரிக்கப்பட வேண்டும். டெங்குக் காய்ச்சலின் போது காய்ச்சல் குறைவடைந்த பின்னரே பெரும்பாலும் அபாய நிலைக்குரிய அறிகுறிகள் ஏற்படும்.

எனவே காய்ச்சல் குணமடைந்தவுடன் டெங்கு நோய் குணமடைந்து விட்டது என்று முடிவு செய்ய முடியாது. அபாய நிலை அறிகுறிகளை மிகக் கவனமாக அவதானிக்க வேண்டும். மேற்கண்ட அறிவுரைகளை கைக்கொள்வதன் மூலம் எம்மையும் எம்மை சுற்றியுள்ள வர்களையும் டெங்கு நோயின் அபாயமான பாதிப்புக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். டெங்கு காய்ச்சலினால் உயிராபத்து ஏற்படுவது ஏற்றுக் கொள்ள முடியாது.

**Dr.ஜெ.பிரதீபன்**
**பொது மருத்துவ நிபுணர்,**
**பல்கலைக்கழக மருத்துவப் பிரிவு,**
**யாழ்.போதனா மருத்துவமனை.**

# இத்தாலியில் மண்சரிவு இருவர் உயிரிழப்பு

## அவசரகால நிலை பிரகடனம்



(வத்திக்கான்)

இத்தாலியின் தெற்கு தீவான இஷியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சுமார் இருவர் உயிரிழந்த நிலையில் பலர் காணாமல் போயுள்ளனர்.

இந்நிலையில், இத்தாலியின் அரசாங்கம் நேற்று முன்தினம் அவசர கால நிலையை அறிவித்தது.

# விமானம் மின்கம்பத்தில் மோதியதால் இருளில் மூழ்கிய ஒரு இலட்சம் வீடுகள்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நேற்று முன்தினம் 2 பேர் பயணித்த சிறிய ரக விமானம் ஒன்று மின்கம்பத்தின் மீது மோதி அந்தரத்தில் சிக்கிக் கொண்டதால் சுமார் ஒரு இலட்சம் வீடுகள் இருளில் மூழ்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாநிலம் மொவ்ண்ட்கொமெரி நகரத்தின் ஹைதுர்பர்க் என்ற பகுதியில் உள்ள மின் விநியோகம் வழ்ங்கும் மின்கம்பத்தின் மீது நேற்று முன்தினம் இரவு சிறிய ரக விமானம் மோதி அந்தரத்தில் தொங்கியுள்ளது.

குறித்த விமானம் மோதியதால் மின் இணைப்பு தடைப்பட்டது. இதனால் 1 இலட்சம் வீடுகள், தொழில் நிறுவனாங்களில் மின் இணைப்பு தடைப்பட்டுள்ளது.

இது குறித்து தகவலறிந்த மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மின்கம்பத்தின் மீது மோதி அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் விமானத்தில் சிக்கிய 2 பேரையும் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

மேலும், விமானம் மோதியதால் இருளில் மூழ்கிய நகருக்கு மின் இணைப்பை மீண்டும் வழங்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 இந்திய...

துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட வுள்ளது.

இதேநேரம் பிடிக்கப்பட்ட 5 படகு களில் இருந்த 24 மீனவர்களும் இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற் படுத்தப்படவுள்ளனர். (ம-33,104)

## பால்மா...

450 கிராம் நிறையுடைய உள்ளூர் பால்மா பொதியின் விலை 175 ரூபா யால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக உள் ளூர் பால்மா நிறுவனமொன்றின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

975 ரூபாயாக இருந்த 450 கிராம் உள்ளூர் பால்மா பொதியின் புதிய விலை 1150 ரூபாயாக அதிகரிக்கப்பட் டுள்ளது. (ம)

## கொழும்பி...

அந்தப் பாதை ஊடாக ரயில் சேவை நடத்தப்படாது என அமைச்சர் அறி வித்துள்ளார்.

இதேவேளை குறித்த ரயில் சேவையை நடத்த முடியாது என்றால் அந்த ரயில் சேவையை மன்னாருக்கு நடத்துமாறு, செல்வம் அடைக்கல நாதன் எம்.பி கோரிய நிலையில், அது குறித்து ஆராய்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ம)

## ஹெரோயினுடன்...

சுழாவடி மற்றும் தாவடி பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

மேலதிக விசாரணைகளின் பின் னர் சந்தேகநபர்களை மல்லாகம் நீதி மன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலி ஸார் தெரிவிக்கின்றனர். (ம-104)

## கனடா அனுப்பு...

பாமலும், பெற்றுக்கொண்ட பணத் தினையும் மீள வழங்காமலும் இருந்த காரணத்தினால் இவ்வாறு முறைப் பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் கனடாவிற்கு அனுப் புவதாக கூறி தங்களிடம் 55 இலட்சம் மற்றும் 44 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாயினை பெற்றுவிட்டு ஏமாற்றுவ தாக, கடந்தவாரம் இருவர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் மேலும் ஒருவர் இவ்வாறு முறைப்பாடு பதிவு செய் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-104)

## தடைகளை...

பினர், இந்த நடவடிக்கை ஜனாதி பதியின் நல்லிணக்க சமிக்ஞை என் றும் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் ஒரு சில இடங்களில் மட்டும் தமது பிள்ளைகள் மற்றும் உறவுகளை நினைவுகூர தடைகள் ஏற்படுத்தப்பட்டமையும் அவர் பாராளு மன்றில் சுட்டிக்காட்டினார். (ம)

## சிங்கள மக்களு...

மூன்றாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதத்தின்போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் சில இடங்களில் இராணுவத்தினரால் சிறுசிறு இடையூறு கள் ஏற்பட்டிருந்த போதிலும், பெரும் பாலான இடங்களில் அஞ்சலி நிகழ்வு கள் அமைதியான முறையில் இடம் பெற்றன.

ஜனாதிபதி மற்றும் சிங்களச் சகோ தரர்கள் மத்தியில் தமிழ்மக்களின் உணர்வுகள் தொடர்பில் ஏற்பட்ட புரித லால் இது சாத்தியமானது.

இதனை சரியாக புரிந்து கொண்ட சிங்கள சகோதரர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நிச்சயம் நன்றி தெரி விக்க வேண்டும். இதுவே நல்லிணக் கத்தின் முதல் படியாகும்.

எனினும், பல துயிலும் இல்லங்கள் இன்னும் இராணுவத்தினரின் கட்டுப் பாட்டிலேயே உள்ளன.

அவற்றை விடுவித்து மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர் களுக்கு அஞ்சலி செலுத்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். (ம)

## நடுநிலையான...

வெளிவிவகார கொள்கையை பின் பற்றினால் மாத்திரமே சர்வதேசத் துடன் இணக்கமாக செயற்பட முடியும்.

அரசியல் பரிந்துரைகளுடன் வெளி நாட்டு தூதுவர்கள் நியமிக்கும்போது சர்வதேச உறவு சிறந்ததாக அமை யாது. துறைசார் நிபுணத்துவம் பெற்ற வர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுத் திங் கட்கிழமை உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, 2015ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் சர்வ தேச உறவில் பாதிப்பு ஏற்பட்டது என குறிப்பிடப்படுகிறது. யுத்த காரணிகளி னால் இலங்கையின் சர்வதேச உற வில் பாதிப்பு ஏற்படவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை காரியாலயத்தின் முன்பாக அரசாங்கத் தின் அமைச்சர் ஒரு சிலருடன் போராட் டத்தில் ஈடுபட்டார்.

இதன்போது அரச தலைவர் அவ் விடத்திற்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு இளநீர் வழங்கி னார். இதனை தொடர்ந்து இலங்கைக் கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடை யிலான நல்லுறவு பாதிக்கப்பட்டது.

அதேபோல் ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகை தந்தபோது அப் போதைய அரசாங்கத்தின் அமைச்சர் நவநீதம்பிள்ளையை தான் திருமணம் செய்து கொண்டால் நன்றாக இருக் கும் எனக் குறிப்பிட்டார். இவ்வாறான கருத்துக்கள் சர்வதேச உறவில் பாதிப்பை ஏற்படுத்தியது.

சர்வதேச உறவு என்பது பரந்து பட்டது. சிறந்த கொள்கை, ஊழலற்ற நிர்வாகம் உள்ளிட்ட விடயங்கள் சர்வ தேச உறவின்போது அவதானத்திற் கொள்ளப்படும் என்றார். (ம)

அவர், யுத்தத்தின்போது மனித உரிமை கள் மீறப்பட்டிருக்கின்றன. சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டிருக்கின்றன. அத னால் இதுதொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை ஒன்று மேற் கொள்ள எதிர்பார்க்கின்றோம் என் றார். அதற்கு மகிந்த ராஜபக்ஷ, ஐக் கிய நாடுகள் சபை விசாரணை மேற் கொள்ளத் தேவையில்லை. நாங்கள் செய்வோம் என்றார்.

ஆனால் அந்த வாக்குறுதியை அவ ருடைய காலத்தில் நிறைவேற்ற வில்லை. பரணகம விசாரணை அறிக் கையை அனைவரும் ஏற்றுக்கொண் டார்கள். அந்த பரிந்துரைகள் எதனை யும் நிறைவேற்றவில்லை.

அதேபோன்று 2013 மற்றும் 2014 ஆகிய இரண்டு வருடங்களும் உள் ளக விசாரணை மேற்கொள்ளுமாறு தெரி வித்து மனித உரிமை பேரவையில் எமக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்பட்டது.

இந்த முறை மனித உரிமை ஆணைக் குழுவில் சர்வதேச விசாரணை மேற் கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கின் றது. இந்த விடயங்கள் காலம் செல்லும் போது மறந்துவிடும் என்றே அரசாங் கம் நினைத்துக்கொண்டிருக்கின்றது.

அவ்வாறு இடம்பெறுவதில்லை. இம்முறை சர்வதேச விசாரணைக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அத னால் எமது நாடு தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பாதிக்கப்பட் டிருக்கின்றது என்றார். (ம)

## மானிப்...

தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர் பில் மேலும் தெரிய வருகையில்,

குறித்த வீதி யில் தலைக்கவ சம் அணியாது சென்ற பொழுதே இவர் இவ்வாறு மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டதாக வும் வாய், மூக்கு என உடைக்கப் பட்ட நிலையில், தாக்கப்பட்ட நபர் மானிப்பாய் பொலிஸ் நிலை யத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ள தாக அங்கிருந்து கிடைக்கும் தக வல்கள் தெரிவிக் கின்றன. (ம-33)

## நாட்...

யுத்த இறுதிக் காலத்தில் ஐக் கிய நாடுகள் சபையின் அப் போதைய செய லாளர் பான்கீ மூன் இலங்கை க்கு வந்தார். அப் போது மகிந்த ராஜபக்ஷ கண்டி யில் இருந் தார். அதனால் பான்கீ மூன் கண்டிக்கு சென்று மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்து ரையாடி இருந் தார். இதன்போது


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 28/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1408
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 9 1 6 6 1 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.11.28
சீட்டிழுப்பு இலக்கம் - 983
L 20 51 70 75
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.11.28
சீட்டிழுப்பு இலக்கம் 3195
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
L 11 42 50 78
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1301
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
P 04 49 50 61 65

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.28
சீட்டிழுப்பு இலக்கம் 262
வெற்றி இலக்கங்கள்
கடகம் 30 35 51 55 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/11/28
சீட்டிழுப்பு இலக்கம் 4953
ஆங்கில எழுத்து / வெற்றிபெற்ற இலக்கங்கள்
Q 5 5 2 6 6 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1928 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022.11.28 தினம் திங்கட்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,375,640/-
U 26 55 73 76
4289 258

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.28
சீட்டிழுப்பு இல : 4089
வர்ணம் : நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,557,560/-
வெற்றி இலக்கங்கள்
03 11 53 65 P

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,089,625/-
திகதி 2022-11-28
வெற்றி வாரம் 3640
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்
06 10 26 34
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,173,120/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
28 வசனா
C 16 07 22 43 75
சீட்டிழுப்பு வாரம் 1104
இள நீலம்
2022.11.28 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 281,196,509.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1874
சீட்டிழுப்பு திகதி 2022-11-28
வெற்றி இலக்கங்கள்
49 50 62 68 D
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 37,460,756/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1754
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.11.28
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,730,720/-
வெற்றி இலக்கங்கள்
14 19 44 58 B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13551)

**076 825 7716** (ஆகாஸ்)



## வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்க் காணும் வேலையாட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (சப்பிளையர்)
- தேநீர் தயாரிப்பவர் (ரீ மேக்கர்)

குறிப்பு - அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். தங்கிநின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.

இல. 452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**077 913 4325/021 221 6779**

(13609)



## C.C.A

சுன்னாகம்

A/L 2024

கலை வர்த்தகம்

ஆரம்பம் டிசம்பர் – 03

காலை 9.00 மணி

என்றும் வலிகாமத்தின் முன்னணி நிறுவனமாகும்

(13612)



Since - 1963

## சதா பொன்ஸ்

கல்வி நிலையம்

மாலி சந்தி – அல்வாய்

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

A/L வர்த்தகப் பிரிவு - 2024

01.12.2022 - பிற்பகல் 3.00 மணி முதல்

| | |
|---|---|
| கணக்கீடு | திரு. V. பகீரதன் |
| வணிகக்கல்வி | திரு. T. லோகேஸ் |
| பொருளியல் | திரு. V. ஜெகதீஸ் |

2023 பிரிவு வகுப்புக்கள் நடைபெறுகின்றன

அனுமதிகளை இன்றுமுதல் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு

**021 226 3206, 077 925 0105, 077 309 5176**

இயக்குனர்

(C-5350)


# செலவுகளை இரத்து செய்ய சுற்றறிக்கை

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் முன்னெடுக்கப்படும் பல்வேறு நிகழ்வுகளுக்கான செலவுகளை இரத்து செய்து சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட நிதி கட்டமைப்பிற்குள், அரச நிறுவனங்களின் துறைசார் நிகழ்வுகள் மற்றும் வெளி நிகழ்வுகளுக்கான நிதிஒதுக்கீடுகளை இடைநிறுத்த கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதி அமைச்சரவை தீர்மானித்தது.

இதற்கமைய இச்சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ம)


## C.C.A

சுன்னாகம்

A/L 2024 வர்த்தகம்

கணக்கீடு - S.தவா

வணிகம் - N.S.கபில்

பொருளியல் - M.விஜிதன்

ஆரம்பம் டிசம்பர் – 03

காலை 9.00 மணி

(13613)



## D.C.M<sub></sub>N - யாழ். நகர்

(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை)

புதிய பிரிவுகள் A/L 2024 கலை வர்த்தக வகுப்புக்கள்

03.12.2022 சனிக்கிழமை

காலை 8.00 மணி

(C-5355)



## ACI

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களுடன்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 2024 BATCH

### கலைப்பிரிவு

ஆரம்பம் 2022.12.03 சனி 10 மணி

| | |
|---|---|
| தமிழ் | S.டெனிக்சன் |
| இந்துநாகரிகம் | G.ஜீவானந்தன் |
| வரலாறு | N.S.தர்மீகன் |
| | S.ஷயீவன் |
| புவியியல் | S.சபரிதன் |
| அரசியல் | க.கபில்ஸ்ரன் |
| பொருளியல் | ம.லிஜிதன் |
| ICT | N.துவாரகன் |

### வர்த்தக பிரிவு

ஆரம்பம் 2022.12.06 செவ்வாய் பி.ப 3 மணி

| | |
|---|---|
| கணக்கீடு | வி.தமிழ்ஈசன் |
| பொருளியல் | ம.லிஜிதன் |
| வணிகக்கல்வி | பா.கோபிதன் |

அனுமதிக்கு - **076 806 6960**

- கொக்குவில் -

(13600)



## வெல்டர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள வெல்டர் (Welder) தேவை.

**077 777 0969**
**077 592 5371**

(C-5358)



## TECHNO WORLD

TECHNO WORLD

தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

புதிய கல்வியாண்டு

A/L 2024

- திகதி 03.12.2022 (சனிக்கிழமை)
- நேரம் : 7.30 am

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும்
5ஆவது முறையாகவும்
98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு

**077 017 5346**

(C-5338)



## விற்பனைக்கு

LKXXXX என்னும் தொடரிலக்கத்தினைக் கொண்ட 10 சில்லுகளையுடைய (Leyland) லொறி (பாரஊர்தி) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு (13598)

**076 852 2359**



## உதவிக்கு ஆள் தேவை

சாவகச்சேரிப் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவருடன் தங்கி இருந்து உதவி புரிவதற்கு 50 வயதிற்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை.

**077 615 3666**

(13601)


## மரண அறிவித்தல்

### திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை



மலர்வு : 09.10.1935
உதிர்வு : 28.11.2022

நெடுந்தீவு மேற்கு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை அவர்கள் நேற்று (28.11.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :-
குடும்பத்தினர்

(13616)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

(13611)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org